
# மறுபடியுமா?

லக்ஷ்மி



பூங்கொடி பதிப்பகம்

## மறுபடியுமா ?

### 1

அம்மா மட்டும் இன்னும் கொஞ்ச காலம் மகளுக்குத் துணையாக இருப்பதாகத் தீர்மானித்து அங்கேயே தங்கி விட்டிருந்தாள்.

ஏதாவது செய்து கொண்டிருந்தால்... துக்கத்தின் சுமை குறையும் என்று எண்ணியவளாக, வீட்டை ஒழுங்குபடுத்துவதில் முனைந்து கொண்டிருந்தாள் பார்கவி.

அந்த வீட்டை அப்பா சிவராமன் சில ஆண்டுகளுக்கு முன்புதான் அவளுக்கு வாங்கித் தந்திருந்தார்.

மகனுக்கு பங்களூரில் இந்திரா நகரில் பங்களா கட்டிக் கொடுத்து விட்டிருந்தார். புதிய கார் வாங்கித் தந்திருந்தார். மகளுக்கு, தான் உபயோகித்த காரை வேலையினின்று ஓய்வு பெற்றவுடன், பரிசாகக் கொடுத்து விட்டிருந்தார்.

மகன்—மகள் என்ற பாகுபாட்டை—அவர் காட்டியதே இல்லை. சொத்து எல்லாவற்றையும் இருவருக்கும் சமமாகவே வழங்கி இருந்தார்.

முன்னறையை வேலைக்காரி பெருக்கித் துடைத்து முடிக்கும்வரை மேற்பார்வை செய்துவிட்டுத் தங்களது படுக்கை அறைக்குள் சென்றாள்.

அவளது கணவன் குருமூர்த்திக்கு அசட்டையான சில பழக்க வழக்கங்கள் அதிகம். இரவு தூங்குமுன் எடுத்துப் புரட்டும் புத்தகங்களை—தலைமாட்டருகில் கிடக்கும் மேஜை மீதும் தரை மீதும் விசிறிப் போட்டுவிட்டுப் போய் விடுவான்.

வீட்டை சுத்தமாக அழகாக வைத்துக் கொள்ள அவளுக்கு மிகவும் ஆசை.

வேலைக்காரி அறைக்குள் வந்து சுத்தப்படுத்து முன், அவள் பரபரப்புடன் கலைந்துகிடந்த படுக்கை விரிப்புகளை எடுத்து ஒழுங்கு செய்தாள்.

தரைமீது, இறக்கையை விரித்துக் கிடக்கும் பறவைகள் போல குவிந்து கிடந்த புத்தகங்கள் மாதப் பத்திரிகைகளை எடுத்து அலமாரியில் அடுக்கத் துவங்கினாள். அப்போது, எதேச்சையாக, நான்காக மடித்த அந்தக் கடிதம் கீழே விழுந்தது.

குனிந்து எடுத்து அதைப் பிரித்தாள். நாத்தனார் பத்மா கணவனுக்கு எழுதிய கடிதம். ஆரம்பத்திலேயே குழந்தை ராதிகாவின் பெயரைக் கண்டதும் தாயின் தவிப்போடு, அடக்க முடியாத ஆவலோடு படித்து விட்டாள்.

“ராதிகா இறந்து போனது ஒருவிதத்திலே நல்லதென்று நினைத்துக் கொள். பெரிய டாக்டர்களே குழந்தை ஒரு “ஸ்பாஸ்டிக் ச்சைல்ட்” புத்தி மட்டமாக இருப்பதுடன் எழுந்து நன்றாக ஓடியாடி நடந்து மற்ற குழந்தைகளைப் போல வளரும் என்று நம்பிக்கை தெரிவிக்கவில்லை. இப்படிப் பட்ட ஒரு மண் பொம்மைக் குழந்தை, வீட்டுக்குத் தேவையா? வாதத்தால் பீடிக்கப்பட்ட புத்திமட்ட குழந்தைகளை வளர்ப்பது என்பது லேசான காரியமா? நாள் முழுதும் பார்கவி குழந்தையோட பக்கத்தில் உட்கார்ந்து கொண் டிருந்தால் உன்னைக் கவனிப்பது யார்? டாக்டர் சொன்ன ஆலோசனையை மறக்காதே. பார்கவி ஒரு ஆரோக்யமான குழந்தையைப் பெற்றெடுக்க லாயக்கில்லாதவள் என்பதை நினைவு வைத்துக்கொள்.

உன் வாழ்க்கை இப்படி பாலைவனமாகப் பாழாகி விடும் என்று நாங்கள் யாரும் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனால் அதற்காக நீ கவலைப்படவேண்டாம்!



கடவுள் கிருபையால் எனக்கு சந்தான பாக்யத்திற்குக் குறைச்சல் இல்லை. மூணு பெண், மூணு பிள்ளைகள் என்று வீடே நிரம்பியிருக்கும் ஒரு வாழ்க்கை அமைந்திருக்கிறது. என் பிள்ளைகளில் யாரை வேண்டுமானாலும் நீ ஸ்வீகாரம் செய்து கொள்ளலாம்! நானும், என் கணவரும் மனம் ஒப்பி இந்த தியாகத்தை செய்ய முன்வருவோம். ராதிகாவை நினைத்து பார்கவி தினமும் ஒரு மூச்சு கதறி அழத் தேவை பில்லை என்று கொஞ்சம் கண்டிப்பாகவே அவளிடம் நடந்து கொள்.

ஊருக்குப் புறப்படும் வரை நானும் பார்த்துக்கொண் டிருந்தேன். ஒரே சந்திரமதி வேஷம்! அவளை நீ கட்டாயம் கண்டித்து வை. மற்றவை பற்றி நீ தீர்க்கமாக ஆலோசித்து எழுது.

உன் அன்புள்ள அக்கா
பத்மா.”

கடிதத்தை மடித்து வைத்தவளின் இதயம் வேதனை யால் வெடித்தது. ராதிகா இறந்து போனது ஒரு வகையில் நல்லது என்று எழுத ஒரு தாய்க்கு எப்படி மனம் வந்தது.

ராதிகா வாத நோய் குழந்தையாகப் பிறந்துவிட்டதன் தவறு முழுவதும் அவளுடையது என்று முத்திரை குத்திவிட்டி ருக்கிறாளே? என்ன நெஞ்சழுத்தம்!

“உங்கள் குடும்பத்திலிருந்து பாரம்பரியமாக வந்துவிட் டிருக்கும் ஒரு கோளாறு” என்று அவளால் திருப்பிச் சொல்ல எத்தனை நாழியாகும்?

கணவனும் அவனது அக்காவும் அவர்களைச் சேர்ந்த உறவினர்களும், அவளை இதுவரை கண்ணால் குத்தி, சொல் லால் சுட்டு இம்சித்தது போதாதென்று இப்போது பகிரங்க மாக ஒரு பட்டத்தைக் கட்டி அவள் வாழ்க்கையிலேயே மண்ணை அள்ளிப் போட முயற்சிக்கிறாளே....பத்மா அக்கா பெரிய ராட்சஸி!

யாரோ பாடுபட்டு சேர்த்து வைத்த சொத்தை தன் குழந்தை கட்டி ஆள வேண்டுமென்ற ஆசை.

அவள் அப்பா சிவராமன் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபட்டுச் சேர்த்து, மகளின் சுகத்திற்காகத் தந்துவிட்ட சொத்தை...'லபக்'கென்று வாயில் போட்டுக்கொள்ள என்ன திட்டம்!

இனி குழந்தையே பிறக்க வாய்ப்பில்லாது போய்விட்டாலும் சரி, அவள் நாத்தனாரின் குழந்தையை ஸ்வீகாரம் செய்துகொள்ளப் போவதில்லை! அவள் கணவன் வற்புறுத்தினாலும் அனுமதிக்கப் போவதில்லை.

பார்கவியின் சகோதரன் ஹரியும் அவளது மனைவி நாராயணியும் அவள் மேல் உயிரையே வைத்திருந்தனர். அப்பாவிற்குப் பின் அண்ணா அவளைத் தன் மகள் போலத் தான் பாவித்தார். அவருக்குக் கூட இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருந்தனர். அப்பாவின் சொத்து வேறு கைக்குப் போய்விடக் கூடாது என்று அவர் நினைக்கவே இல்லையே! தமது குழந்தைகளில் யாரையாவது தத்து எடுத்துக் கொள்ள சொல்லவில்லையே?

''பார்கவி! மனதைத் தளர விடாதே. அடுத்ததாகப் பிறக்கும் குழந்தை ஆரோக்கியமாக இருக்கும். கடவுளை நம்பு....'' என்று சொல்லிவிட்டு முன் நெற்றியில் புரண்ட அவளது கூந்தலை ஆதரவுடன் ஒதுக்கிவிட்டபோது... ''அண்ணா!'' என்று எப்படிக் கதறினாள்?

பச்சைக் குழந்தையைத் தேற்றுவது போல அண்ணா அவளை எப்படியெல்லாம் சமாதானங்கள் கூறித் தேற்றினார்!

பத்மாவின் கடிதத்தைப் படித்துவிட்டுத்தான் அவள் ஆத்திரமும் துயரமும் தாங்க முடியாது, அந்த அறையின் தரையில் வந்து படுத்துக்கொன்டு வெகுநேரம் அழுது கொண்டிருந்தாள்.

# 2

பெற்றோர்களாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்த கணவன் குருமூர்த்தி. அவர்கள் பல ஆண்டு காலம் வியாபாரம் காரணமாக பம்பாயில் வாழ்ந்து விட்டு முடிவில் பங்களூரில் குடியேறிவிட்டவர்கள். அவன் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

''கிராமத்துப் பக்கமாச்சே! பம்பாயிலும் பங்களூரிலும் வளர்ந்து பழக்கப்பட்ட நம்ப பொண்ணுக்கு சரிப்பட்டு வருமா?'' அம்மா தங்கம் ஆரம்பத்திலேயே கவலைப் பட்டாள்.

'பார்கவி கிராமத்திலயா இருக்கப்போறா? பையன் எம்.பி.ஏ. பிரில்லியண்ட் சாப்! 'பீகாக் பெயிண்ட்ஸ்' நிறுவனத்திலே பெரிய அதிகாரியாக இருக்கான். கை நிறைய சம்பளம், கண் நிறைஞ்ச பையன். சொத்து சுகமில்லை, விதவைத் தாயார். இரண்டு பிள்ளைகள். ஒரு பெண். மூத்தவன் கல்யாணமாகி என்ஜியராக அமெரிக்காவில் இருக்கான்.

''பெண்தான் வீட்டுக்கு மூத்தவள். கல்யாணமாகி குழந்தை குட்டிகளோட மதுரைப் பக்கத்திலே வாழ்ந்துண்டு இருக்கா. பிக்கல் பிடுங்கல் இல்லாத இடம். நம்ம குழந்தையை உள்ளங்கையில் வச்சுண்டு தாங்குவான்'' என்றார் அப்பா.

கணிசமான வரதட்சிணையுடன், நகைகள் சீர் வகைகளுடன், பங்களூர் 'குசலாம்பாள்' கல்யாண மண்டபத்தில் மிக விமரிசையாக கல்யாணம் செய்து கொடுத்தார் அப்பா. அத்துடன் உடனடியாக பார்கவிக்கு சென்னையில் சுகமாக வசிக்க ஒரு வீட்டை வாங்கித் தந்தார்.

பார்கவி விரைவில் தாயாகப் போகிறாள் என்று கேட்டதும் சந்தோஷத்துடன் ஓடி வந்தவர் தமது காரை அவளுக்குப் பரிசாக அளித்தார்.

"டாக்டரைப் போய் அடிக்கடி பார்க்கணுமே. குழந்தை கார்ல போய் வரட்டும்."

வளைகாப்பிற்காக அம்மா பட்டுச்சேலை, பச்சைக்கல் நெக்லஸ் செட் எல்லாம் பரிசாகக் கொடுத்திருந்தாள்.

"உங்காத்துக்காரர் 'பீகாக் பெயிண்ட்ஸ்' ஸில் வேலை பார்ப்பதை நினைவூட்டத்தான் நானும் உன் அண்ணாவும் இந்த மயில் கழுத்து வர்ண காஞ்சிபுரப் பட்டுப்புடவை வாங்கினோம்." மன்னி நாராயணி பரிகசித்தபோது அவள் மகிழ்ச்சியால் பூரித்துப் போனாள். பிறந்த வீட்டவர்கள் அவளை எப்படித் தாங்குகிறார்கள்! ஸ்ரீமந்தம் இனிதே நடந்தேறியது. சென்னையிலேயே பிரசவத்தை வைத்துக் கொள்வது என்று தீர்மானம் ஆகியது.

மகளுக்காகப் பணத்தை வாரியிறைக்கத் தயாராக இருந்தார். ஆரம்பத்திலிருந்து ஒரே கையாக பெரிய லேடி டாக்டர்தான் கவனித்து வந்தாள். உடல்நிலை திருப்திகரமாகவே இருந்தது.

நோவு எடுத்தவுடன் தாமதமின்றி ஏ.சி. அறையிலே டாக்டர் சொன்ன அந்த பிரபல நர்ஸிங் ஹோமிலேதான் அனுமதிக்கப்பட்டிருந்தாள்.

சாதாரண சுகப்பிரசவம் என்றுதான் நினைத்தார்கள். "ஸிஸேரியனாக" மாறியது. அறுவைக்குப் பிறகு எடுத்த குழந்தை திண்ணென்று கை நிறைய தங்க விக்கிரகம் போல் கொழு, கொழுவென்று....எப்படி இருந்தாள் ராதிகா!

தலை நிறைய கூடை கவிழ்த்தது போல் கருகரு முடி. திராக்ஷைக் கண்கள். குண்டு கன்னங்கள். செவேலென்று சுருண்டு கிடந்த ரோஜாப் பூவைப் போல தொட்டிலில் கிடந்தாளே!

"ராதிகாங்கிற பேர் அவருக்குப் பிடிக்கும் அப்பா" மகள் சொன்னபோது சிவராமன் சிரித்துக் கொண்டார்.



"அவள் உங்க வீட்டுப் பொண்ணு நீயும் அவரும் விரும்பின பெயரை வைக்கணும்" கல்கண்டை வாயில் போட்டுக் கொண்டு மென்றபடி புன்னகைத்தார் அப்பா.

அதற்குப் பின்னர் ஊருக்குத் திரும்பிய சிவராமன் மறுபடியும் தமது பேத்தியைக் காண வரவில்லை. பேத்தி பிறந்த இரண்டாவது மாதம்...மாரடைப்பால் திடீரென்று அவர் காலமாகி விட்டார். அந்த மாபெரும் இழப்பின் துயரத்தினின்று விடுபட முயன்று கொண்டிருந்த சமயந்தான் அவளுக்கு இன்னொரு அதிர்ச்சி.

தொட்டிலை நிறைத்த நிலவுபோலக் குழந்தை அழகாக—குண்டாக இருந்தாள். ஆனால் ஒரு ஆரோக்கியமான குழந்தையினுடைய வளர்ச்சியின் அறிகுறிகள் எதுவுமே அவளிடம் காணப்படவில்லை.

மூன்றாவது மாதமே, தாயின் முகம் பார்த்து சிரிக்க வேண்டிய குழந்தை மாதம் ஏழு ஆகியும் போட்ட இடத்தில் போட்ட நிலையிலேயே கிடந்தாள்.

கவிழ்ந்து, புரண்டு, நீந்தி, தவழ்ந்து உட்கார வேண்டிய பருவத்திலே எதுவுமே நடக்கவில்லை.

மாவில் உருவாக்கிய பொம்மையைப் போல, கிடத்தின இடத்திலேயே அசையாது கிடந்தாள்.

"பட்சி தோஷமோ? இப்படி இருக்கே?" அதிசயப் பட்டாள் பார்கவியின் மாமியார் லலிதா.

"டாக்டர்கிட்ட காட்டணும். எனக்கு ஒண்ணும் சரியாகப்படலை" சூள் கொட்டினாள் நாத்தனார் பத்மா.

டாக்டர்கள், ஆஸ்பத்திரிகள் என்று ராதிகாவுடன் அவள் அலைந்த அலைச்சல் அப்பப்பா! அவைகளை இப்போது நினைத்தாலும்கூட நடுக்கமாகத்தானிருந்தது.

குழந்தை சிகிச்சை நிபுணர்கள் பலரைப் பார்த்தாகி விட்டது. 'நியூரோஸர்ஜன்' நியூரோபிஸிஷியன் எல்லோரை

யும் கலந்து ஆலோசித்தாகிவிட்டது. எல்லோரும் ஒரே கதையைத்தான் சொன்னார்கள்.

ராதிகா ஒரு ஸ்பாஸ்டிக் ச்சைல்டு. அதாவது வாதத் தினால் மூளை பாதிக்கப்பட்ட குழந்தை. 'செரிபரல்பால்சி' என்பார்கள். இதற்கு பல காரணங்கள் சொல்லப்படு கின்றன.

குழந்தை கருவில் உருவாகிக் கொண்டிருக்கும் போதோ பிறந்த சமயமோ ஏற்பட்ட ஊமைக் காயத்தினால் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டு வளர்ச்சி குன்றியிருக்கலாம். தாய்மைப் பேற்றின் போது, தாயாருக்கு மணல்வாரி அம்மை போட்டதால் வரலாம். பராம்பரிய 'ஜெனிடிக்' கோளாறாகவும் இருக்கலாம்.

"ஆமாம், நீங்கள் கல்யாணத்திற்கு முன்னர் ஒருவருக் கொருவர் நெருங்கிய உறவினர்களோ...அத்தை பெண், மாமா மகன் போல...."

"அப்படியெல்லாம் இல்லை டாக்டர். நான் பம்பாய் பட்டண வாசி. அவர் தஞ்சை மாவட்டத்து கிராமத்துவாசி. முன்பின் கனவில் கூட பார்த்ததில்லை."

"குடும்பத்தில் உறவினர்கள் யாருக்காவது...இந்த மாதிரிக் குழந்தை..."

"என் சகோதரிக்கு ஆறு குழந்தைகள். எல்லாம் சொட்டை வாழைக் குட்டிகள். பிடுங்கி எடுத்த வள்ளிக் கிழங்குகள் போல, என் அண்ணனுக்கும் மூணு குழந்தைகள். எனக்குத் தெரிந்து எங்கள் குடும்பத்தில் இப்படி யாரும் கிடையாது" குரு சொல்லி விட்டு பார்கவியை வெறித்துப் பார்த்தபோது அவமானத்திலே சுருண்டு போனாள்.

அவள் பக்கத்தில் மட்டும் யாருக்கு அப்படி ஒரு குழந்தை பிறந்துவிட்டிருக்கிறது?

"எனக்கு ஒரே அண்ணாதான். அவருக்கு மூன்று குழந் தைகள். எல்லோரும் ஆரோக்யமாக இருக்கா. எந்த விதமான



குறையும் கிடையாது" கொஞ்சம் அழுத்தத்தோடு சொல்லி விட்டுக் கணவனைக் கோபத்துடன் பார்த்தாள்.

அதற்குப் பின்னர்தான் அவர்களது உறவின் இடையே விரிசல் காணத் துவங்கியது.

நோயாளியான குழந்தை கைகால் விளங்காது பொம்மையாகக் கிடந்த குழந்தை. ஆனாலும் அவளை விட்டு கணமும் பிரிய மனமின்றி இரவும் பகலும், கருத்தோடு டாக்டர் கூறியபடியெல்லாம் குழந்தையை கவனித்துக் கொண்டாள் பார்கவி.

பம்பாயில் நடந்த ஒரு மருத்துவ கூட்டத்தில் கலந்து கொள்ள குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் டெய்லர் என்பவர், அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். ஸ்பெஷ லிஸ்டின் கோரிக்கைக்கு இணங்கி, அவர் ராதிகாவைப் பரிசோதிக்க ஒப்புக் கொண்டதும், மகளைத் தூக்கிக் கொண்டு, அண்ணனின் துணையோடு பம்பாய்க்குப் பறந்தாள்.

டாக்டர் டெய்லரும் ராதிகாவைப் பரிசோதித்து விட்டுத் தலையை அசைத்து விட்டார். வாய்—பின்புறம் முதலிய இடங்களிலிருந்து சிறிதளவு திரவத்தைப் பரி சோதனைக்கு எடுத்துச் சென்றிருந்தார்.

வெளிநாட்டு பரிசோதனைச் சாலையிலே மிகவும் நுட்ப மாகப் பரிசோதிக்கப்பட்டு வந்த சோதனையின் முடிவு.... மிகவும் திடுக்கிட வைத்தது. ராதிகாவின் நிலைக்கு, பாரம் பரியமாக வந்துள்ள ஜீன்களின் கோளாறுதான் காரணம். தாயோ, தந்தையோதான் இதற்குப் பொறுப்பாளி.

அதற்குப் பின்னர்தான் கணவனும் மனைவியும் மெல்ல...விலகி நகர்ந்து...வெகு தொலைவில் சென்று விட்டனர்.

ஒருநாள் சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் தலை நிமிர்த்தி அவளிடம் கேட்டான்.

“உன் அத்தை பெண்ணின் குழந்தை ஒரு வயதில் இறந்து போச்சுன்னு சொன்னியே...அதுக்கு உடம்புக் கென்ன?”

தாடை இறுக கோபமாக உறுத்துப் பார்த்தாள். அவன் மனதில் என்னத்தை வைத்துக்கொண்டு அப்படி ஒரு கேள்வி கேட்டான் என்பது புரிந்து விட்டது.

“அந்தக் குழந்தை எந்த வியாதியாலும் செத்துப் போகலை. ஒரு விபத்தில, நெருப்புக் காயத்திலே செத்துப் போச்சு. ராதிகாவுக்கு வந்திருக்கிற வியாதிக்கும் அதுக்கும் சம்பந்தமேயில்லை. நீங்க பளிச்சுன்னு நேரிடையா கேட்டிருக்கலாமே. எங்கள் குடும்பத்து வழியாக “ஜெனிடிக்” கோளாறினாலே பரம்பரை தோஷமாப் பிறந்திருக்கிறாள் ராதிகான்னு உங்கள் கணிப்பு இல்லையா?” அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள். குரு தன் தோள்களைக் குலுக்கினான் அசட்டையாக.

“உங்க மாமா பிள்ளையின் மூன்று வயசு மகன் ஆஸ்பத்திரியில் கிடந்தானே? அது எதுக்காகன்னு நான் கேக்கலாமா?”

“பார்கவி! உனக்கு நன்னாத் தெரியும், அந்தக் குழந்தைக்கு இரண்டு வயசான போது “போலியோ” வந்து படுத்துண்டிருந்தது. அதுக்கும், இதுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.”

“யார் கண்டா? உங்க பரம்பரையில் போலியோ வர ஒரு பலவீனம் ‘ஜெனிடிக்’ கோளாறாக இருக்குமோ என்னவோ?”

“ஷட் அப் ஐ ஸே!” குரு இரைந்து சத்திவிட்டு பாதி சாப்பாட்டிலே எழுந்து சென்று விட்டான்.

இப்படி அவர்களுக்குள் எத்தனையோ தர்க்கங்கள்—பேச்சுக்கள்—சண்டைகள். ஒருவர் பரம்பரையை மற்றவர் துருவித் தெரிந்து கொள்ள நினைக்கும் சந்தேகப் பார்



வைகள். கணவனும் மனைவியும் விரோதிகள்போல விலகிக் கொண்டு சென்றனர்.

மனதிலே சோர்வும், தடுமாற்றமும் ஏற்பட்ட போதெல்லாம் ஊனமுற்ற குழந்தைகளுடன் உலகிலே பாடுபடும் பல தாய்மார்களின் உண்மைக் கதைகளை ஆர்வத்துடன் படித்துப் பார்த்தாள்.

அமெரிக்காவில் ஒரு பெண்மணி கருவிலே ஏற்பட்ட கோளாறினால் கண்களும், மூக்கும் இடம் மாறி...விகார உருவுடன் பிறந்துவிட்ட மூளை மந்தமான தன் குழந்தையை ஒரு சராசரி மனித ஜீவனாக்கப் பட்ட பாட்டை, எடுத்துக் கொண்ட முயற்சிகளை அயராத உழைப்பைப் படித்துவிட்டு அழுதாள்.

“கடவுளே! எனக்கும் இந்தத் தாயைப் போன்று தளராத பொறுமையைக் கொடு” தினமும் தன்னுள்ளே வேண்டிக் கொண்டாள்.

இளம்பிள்ளை வாதத்தினால் கால் விளங்காது போய் விட்ட தன் குழந்தையுடன் பாடுபட்ட ஜப்பானியத் தாயின் கதையைப் படித்து மனத்திற்குத் தெம்பை ஊட்டிக் கொண்டாள்.

பிறவியிலேயே குருடாகிவிட்ட தன் மகனைப் பாடுபட்டுப் படிக்க வைத்து வளர்த்து ஆளாக்கிய ஒரு தமிழ்த் தாயின் கதையைப் படித்து நெஞ்சுருகிப் போனாள்.

டாக்டரிடம் காட்டி வர ராதிகாவை எடுத்துக் கொண்டு அந்த ஆஸ்பத்திரிக்குச் சென்றபோதெல்லாம், அந்த வார்டின் வராந்தா வழியே நடக்க நேரிட்டது. வார்டுக்குள்ளிருந்த கைகால் விளங்காத ஊனமுற்ற குழந்தைகளின் பார்வையாளர்கள் நேரத்திலே, அருகே தாய்மார்கள் கட்டிலருகே உட்கார்ந்தபடி, குழந்தையை மடி மீது அணைத்துக் கொண்டு, கொஞ்சிப் பேசி, பிஸ்கட், பழங்களை ஊட்டி உபசரிப்பதைக் கண்டு மனம் நெகிழ்ந்து போயிருக்கிறாள். எந்த ஒரு தாயும், ஊனம் என்ற

காரணத்திற்காக, தான் பெற்ற குழந்தையை உதறிவிடுவ தில்லை. பத்து மாத பந்தத்திற்கு அப்படி ஒரு அதிசயமான சக்தி.

கல்யாணமான புதிதில் குரு அவளைத் தங்கள் அலுவல கத்து பார்ட்டிகளுக்கும், நண்பர்கள் வீட்டுக் கல்யாணத் திற்கும், பிறந்த நாள் வைபவங்களுக்கும் தப்பாமல் அழைத்துப் போவது வழக்கம்.

மிதமான ஒப்பனையில் ஜம்மென்று அழகாகத் தெரிந்த மனைவியுடன் மாமனார் பரிசாக அளித்த காரில் போய் இறங்குவதில் குருவிற்கு மிக்க பெருமையாகத் தானிருந்தது.

"உங்க மனைவி உண்மையிலே ரொம்ப அழகா இருக் காங்களே!" வியப்புடன் ஆபீஸ் ஸ்டெனோவோ செகரெட்டரி ஷீலாவோ, ரிஸப்ஷனிஸ்ட் ரமாவோ சொல்லி விட்டால் போதும், கத்தரி வெய்யில் மண்டையைப் பிளக்கும் சமயம். ஊட்டியின் சிலிர்ப்பு உள்ளே வந்துவிட்டது போல ஜில்லென்றாகிவிடுவான்.

ஆனால் ராதிகா பிறந்து அந்த ஊனமும் தெரிந்த பிறகு... மனைவியை வெளியே அழைத்துக் கொண்டு போக குரு ஆசைப்பட்டதே இல்லை.

"உங்க குழந்தை உடம்பு இப்போ எப்படி இருக்கு?" யாராவது கேட்டுவிட்டால்... அப்படியே அவமானத்தில் சுருங்குவான்.

ராதிகா உலகில் தோன்ற, பார்கவி ஒருத்தி மட்டுமே காரணம் போல பக்கத்தில் நிற்கும் மனைவியைக் கண்களால் சுடுவான். சமயம் கிடைத்தபோது வார்த்தைகளால் மெல்ல வெட்டுவான்.

வீட்டிலே வேலைக்காரியிடம் நோயாளிக் குழந்தையை விட்டுவிட்டு பார்ட்டிகளில் பல்லைக் காட்டிக்கொண்டு,



போலியாகச் சிரித்தபடி பேசிக்கொண்டு நிற்க பார்கவிக்கு பிடிக்காமலே போய்விட்டது.

"இன்னிக்கு நம்ம ஆபீஸிலே டைரக்டருக்கு டின்னர்." அவன் ஆரம்பித்தால் அவள் சட்டென மறுக்கத் துவங்கி னாள்.

"நீங்க போயிட்டு வந்துடுங்கோ. குழந்தைக்கு காய்ச்சல் போல இருக்கு. வேலைக்காரிகிட்ட விட்டுட்டு வர பயம்மா இருக்கு."

அவர்களது படுக்கை அறைக்குப் பக்கத்து அறையில் தான் ராதிகா தொட்டிலிலும் பின்னர் ஒரு கட்டிலிலும் படுத்தபடி வளர்ந்தாள்.

பகல் முழுதும் பார்கவி மகளுடன் கூடவே இருந்து சலியாது பணிவிடை செய்தாள். மூன்று வயதாகியும் உணவை எடுத்து சாப்பிட முடியாத பரிதாபமான நிலை. கையும், காலும் தொய்ந்தபடி கிடந்த குழந்தைக்கு வேளைக்கு ஆகாரம் மருந்து என்றெல்லாம் அயராமல் கவனித்தாள்.

இரவில் வேலைக்காரியைத் துணையாகப் படுக்க ஏற்பாடு செய்தாள். ஆனாலும், படுக்கையிலே அவளுக்குத் தூக்கமே வராது. குருவின் உறக்கத்தைக் கலைக்காது மெல்ல, மிக ஜாக்கிரதையாகப் படுக்கையினின்றும் எழுந்து அடிமேல் அடிவைத்து குழந்தையின் அறைக்குள் வந்து நிற்பாள். விடி விளக்கின் ஒளியில் தூங்கும் குழந்தையின் முகத்தைப் பார்த்து அந்தத் தாய் மனம் பதறும்.

"கடவுளே! ஏதாவது ஒரு அற்புதத்தை நடத்திக் காட்ட மாட்டாயா? என் ராதிகா எழுந்து பாவாடை குலுங்க நடந்து ஓடி வந்தால்... உன் கோவிலை ஆயிரத் தெட்டு முறை வலம் வருவேன். இது சத்தியம்" கண்ணீர் பெருக, எத்தனையோ முறை உள்ளம் கரைய அவள் வேண்டியதுண்டு.

ஆரம்பத்திலே ஒப்புக்காக, குரு ஆபீஸிற்கு போகுமுன் அந்த அறை வாயிலில் ராதிகாவை எட்டிப் பார்த்துவிட்டு ‘‘குழந்தை சாப்பிட்டாளா? தூங்கினாளா?’’ எனக் கேட்டு விட்டுப் போவான். நாளடைவில் அந்தப் பழக்கமும் நின்று போயிற்று.

‘‘இங்கே வந்து ராதிகாவை கொஞ்சம் பாருங்கோ’’ ஒரு நாள் அவள் கூப்பிட்டபோது வந்தான். தொத்து நோயைக் கண்டு அஞ்சுகிற முகபாவத்துடன் வாயிலருகிலேயே நின்றான்.

‘‘ஆபிஸிலே கொள்ளை வேலை தலைக்கு மேல் கிடக்கு. இங்கே என்ன இருக்கு பாக்கிறதுக்கு? கையைக்கூட ஆட்டாம, சதைப் பிண்டமா கிடக்கிறதைப் பார்த்துட்டு நாள் முழுசும், நானும் வேதனைப்படணும்னு உன் ஆசையா?’’ சீறினான்.

சாட்டையால் ஓங்கி வீரிவிட்டது போல் அவள் துடித்துப் போனாள்.

அவர்களது சீமந்த புத்திரி! குழந்தையை சதைப்பிண்டம் என்று துச்சமாகப் பேச அவனுக்கு எப்படி மனம் வந்தது? அவள் உள்ளத்திலே குமுறி ஊற்றாகப் பெருகிய இந்த உணர்வு அவன் மனதிலே ஏன் இருக்கவில்லை?

‘‘அம்மா ராதிகா! உன்னை அப்பா வெறும் சதைப் பிண்டம்னு கோவிச்சுக்கறார். அதுக்காகவாவது நீ கொஞ்சம் அம்மாவைப் பார்த்து சிரிக்க மாட்டியா? ராதி; என் கண்ணே!’’ தொட்டில் அருகே வந்து அவள் குமுறி குமுறி அழுதாள்.

ஐந்தாவது ஆண்டின் ஆரம்பத்திலே திடீரென ராதிகாவிற்குக் காய்ச்சல் கண்டது. மூச்சுத் திணறலும் ஏற்பட்டது. டாக்டர்களை வரவழைத்தாள். அம்மா உதவிக்கு ஓடோடி வந்தாள்.

சுவாசப் பைகளின் இயக்கத்திலே கோளாறு. டாக்டர்கள் கையை விரித்தனர். ராஜ வைத்தியம் செய்தும்



பயனில்லாது போயிற்று. நான்காம் நாள் ராதிகா இறந்து போனாள்.

அண்ணாவும், மன்னியும் எத்தனை ஆறுதல்கள் சொன்னார்கள். அம்மா அவளை அணைத்துக் கொண்டு அழுது தேற்ற முயன்றாள். உறவினர்கள் ஒப்புக்காகவாவது ஆறுதல் வார்த்தைகளை அள்ளித் தெளித்து விட்டுப் போனார்கள்.

ஆ—ஊ என்ற அர்த்தமற்ற சப்தங்களைத்தான் குழந்தை எழுப்பினாள். அவைகளும் அடங்கிப் போன பின் அந்த அறையின் வெறுமை அவளது நெஞ்சைச் சுமையாக அழுத்தித் துயரத்திலே துவளச் செய்தது.

‘‘பாடுபட்டே—கடைசியிலே பலனே இல்லாம போச்சு. இப்படி நடக்கணும்னு இருக்கு. வருத்தப்படாதே பார்கவி, உன் துயரிலே எனக்கும் பங்குண்டு. நானும் குழந்தையின் தகப்பனாச்சே’’ இப்படி சில வார்த்தைகளாவது அவன் சொல்லி இருந்தால் அவள் மனதை வருத்திப் பிழிந்தெடுக்கும் அந்தத் துயரம் எத்தனை லேசாகப் போய்விட்டிருக்கும்?

அதற்குப் பதில் குரு...அவளை எப்படி அதட்டினான். தன் தாய், தன் அக்கா இவர்கள் முன்னிலையில் எப்படி அசட்டையாகப் பேசினான்.

‘‘அழுதுண்டே இருந்தா செத்த குழந்தை எழுந்து ஓடி வந்துடுவாளா? உசிரோட இருக்கறச்சயே ஓடத் தெரியாத மண் பொம்மை...ஸ்டாப் இட்’’ எப்படிக் கத்தினான் அவன்!

‘‘எத்தனை செலவு? எத்தனை பாடு? எத்தனை வேதனை? இனியாவது நிம்மதியா இரு’’ நாத்தனார் பத்மாவின் உபதேசம்.

குளியலறையில் அவள் குழாயை அடக்கிவிட்டு துவாலையைத் தேடிக் கொண்டிருந்த போது வராந்தாவிலே குருவும், பத்மாவும் ஏதோ பேசி சிரித்த சப்தம் கேட்டுத் திகைத்துப் போனாள்.

செத்த வீட்டில் சிரிக்கத் தோன்றும் இவர்கள் எல்லாம் மனிதப் பிறவிகள்தானா? ஒரு மரியாதைக்காவது ஒரே ஒரு நாள் அந்த உரத்த பேச்சுக்களையும், சிரிப்பையும் மூட்டை கட்டி வைக்க முடியாதா?

அந்தப் பத்மா—எப்போது ராதிகா இறப்பாள் என்று காத்திருந்த காதகி!.. தன் தம்பிக்கு என்ன ஆலோசனை கூறி இருக்கிறாள்? நடந்ததையெல்லாம் தொடர்கதையாக நினைவில் எழுப்பிக் கொண்டவள் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டே இருந்தாள்.

# 3

வாயிற்புரம் நிழலாடியது. கண்ணீருடன் நிமிர்ந்தாள் பாாகவி. தங்கம்மா தயக்கமாக நின்று கொண்டிருந்தாள்.

“பார்கவி! சொன்னதைக் கேளும்மா. உன் மனசு படற வேதனை எனக்குத் தெரியும். ஆனால் நீ ஒதுங்கி இந்த அறைக்குள்ளேயே கிடக்கிறது நியாயம் இல்லே. அம்மா நான் உன்னைப் போல ரொம்பப் படிச்சவ இல்லதான். ஆனால் உலக அனுபவம் நிறைய உண்டும்மா, தெரிஞ்சுக்கோ. பெண் களைப் போல ஆண்களுக்கு, தங்கள் வருத்தத்தை வெளியே அதிகமா காட்டிக்கத் தெரியாது. ஆண் பிள்ளைங்கற கௌரவம் வேற. பல்லைக் கடிச்சுண்டு எல்லா வேதனையை யும் முழுங்கிண்டிருப்பா. நான் நாளை ‘பிருந்தாவன்’லே கிளம்பறேன். நானும் பங்களூர் போய்ட்டா நீ தனியாகத் தான் இருப்பே. நீ பாட்ல இங்க வந்து படுத்துண்டு அழு துண்டே கிடந்தா...பகல் சாப்பாட்டுக்கு அவர் வர்ற சமயம் சமையல்காரர்தான் பரிமாறுவார். அப்புறம் அவருக்கே வெறுப்பு வந்து வீட்டுக்கு வரதை நிறுத்தினா என்னாகும்? யோசிம்மா. உன் வாழ்க்கை இந்தக் குழந்தையோட முடிஞ்சிடப் போறதா? நீ வேணும்னாலும், உயிரை அழிச்சிக்க முடியுமா?”



அம்மா எடுத்துச் சொன்னதில் அர்த்தம் இருப்பதை உணர்ந்தாள். விருக்கென எழுந்து உட்கார்ந்தாள். அவிழ்ந்து, புரண்டு முதுகில் தொங்கிய கூந்தலை வாரிகட்டிக் கொள் வதற்குள் தோட்டத்திற்குள் கார் வரும் ஓசை கேட்டது. பரபரப்புடன் முகத்தைக் கழுவ குளியலறைக்குள் ஓடி னாள்.

மனைவி உணவு பரிமாற நின்றதை குரு கவனித்தான். “இன்னிக்கு மழை பெய்யப் போறது போலிருக்கே!” ஏளன மாகச் சிரித்தான்.

“ரொம்ப வெய்யில். கட்டாயம் ஊருக்கு மழை தேவை யாச்சே” அவளும் வேடிக்கையாக்ப் பேசினாள்.

அன்று மாலை அவள் அடையாறில் ‘கிளினிக்’ வைத்துக் கொண்டிருந்த தங்கள் குடும்பத்து சிநேகிதி டாக்டர் ரேவதியைப் பார்க்க அம்மாவுடன் போய் வந்தாள்.

“அனுபவத்தின் பேரில் சொல்கிறேன் கேள், எல்லாத் தையும் மறந்துட்டு, இயற்கையை ஒட்டி வாழத் தெரிஞ் சுக்கோ. சீக்கிரம் அடுத்த குழந்தை பிறக்கும். உன் வாழ்வும் வளமாகும்” என்றாள் டாக்டர்.

“ஞாபகமிருக்கா டாக்டர்? முன்பு டாக்டர் டெய்லர் அனுப்பின விவரப்படி ஏதோ ஜெனிடிக் கோளாறு இருப் பதாக...”

“வெங்காயம்! அதையெல்லாம் மறந்திட்டு மாங்காடு காமாக்ஷியை மன்சிலே நினைச்சிண்டு சந்தோஷமா எல்லா ரையும் போல வாழத் தெரிஞ்சுக்கோ. சீக்கிரம் உனக்கு ஒரு நல்ல ஆரோக்கியமான குழந்தை பிறக்கும்” அதட்ட லாகக் கூறினாள் டாக்டர் ரேவதி.

“அப்படி நான் தாய்மையடைஞ்சாலும் அந்தக் கருவைக் கலைக்கிறது நல்லதுன்னு ‘ஸ்பெஷலிஸ்ட்’ அபிப்பிராயப் படறாரே.”

"நீ மறுபடியும் தாய்மை அடைஞ்சுட்டா எங்கிட்டவா- என்ன செய்யறதுன்னு அப்ப யோசிப்போம்'' நம்பிக்கையுடன் டாக்டர் ரேவதி அவளை அனுப்பி வைத்தாள்.

சமீப காலமாக குரு மிகவும் மாறித்தான் விட்டிருந்தான். வீட்டிற்கு வரும்போதே சிடு சிடுவென்று எரிச்சலுடன் காணப்பட்டான்.

அடிக்கடி வெளியூர் பயணங்கள், கம்பெனி காரியமாக என்று சொல்லிக்கொண்டு கிளம்பிச் சென்றான்.

இரண்டு தடவைகள் அவன் சில நாட்கள் அதிகமாகவே- பம்பாயில் தங்கிவிட்டு வந்தான்.

சில மாதங்களுக்குப் பின்னர், கம்பெனி காரியமாக ஜெர்மனிக்குப் போயிருந்தான். அங்கிருந்து அமெரிக்காவி லிருந்த சகோதரனை பார்த்துவிட்டு இரண்டு மாதங்களுக்குப் பின்னரே ஊர் திரும்புவதாக அவனது திட்டம்.

அமெரிக்காவிலிருந்த அவளது மூத்த மருமகள் பிரசவத் திற்கு இருப்பதால், உதவி செய்வதற்காக, குருவின் தாயார் லலிதா போயிருந்தாள். சாதாரண காலத்திலேயே அவள் மூத்த மகனைத்தான் எப்பொழுதும் உயர்வாக நினைப்பவள். "அமெரிக்காவில் இருக்கிறான். இரண்டு கார்கள் வச்சிண்டி ருக்கான்'' என்று தம்பட்டமடித்துக் கொள்வாள்.

அதற்கடுத்தபடியாக மகள் பத்மாதான் அவளது உயிர். "பத்மாவுக்குத் தள்ளவேயில்லை. குழந்தைகளை வச்சிண்டு பாவம்! தன்னந்தனியா திண்டாடுகிறாள்'' என்று கூறிவிட்டு, அம்மாவின் செலவிற்குப் பெரியவன் அனுப்பிய டாலர்களை பத்மாவிடம் கொடுத்துவிட்டு, மேற்செலவிற்கு சின்ன மகனிடம் மாதத்திற்கு இவ்வளவு என்று வசூலித்துக் கொண்டு, பெண் வீட்டிலேயே ஹாய்யா இருப்பது அவள் வழக்கம்.

எப்பொழுதாவது வந்து ஒரு மாதம் குருவுடன் தங்கி னாலே அபூர்வம்.



"கொடைக்கானலிலேருந்து வர அந்த முட்டை கோசும், காலிபிளவரும், பச்சு பச்சுன்னு எப்படி இருக்கும் தெரியுமா? தினம் மீனாட்சியை தரிசனம் பண்ணிண்டிருந் தாலே போதும். பசி தாகம் ஏதும் இந்த ஜென்மத்துக்கு இருக்காது!'' சொல்லிவிட்டு மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பி விடுவாள்.

'ஒழியட்டும்' என்று மாமியாருக்கு மறுப்பே சொல்ல மாட்டாள் பார்கவி.

நாத்தனார் பத்மாவைப் போல மாமியார் லலிதாவும் துடுக்காகத்தான் பேசுவாள். பிறர் மனம் நோக குத்திக் காட்டிப் பேசாவிட்டால் பொழுது போகாது.

"ஹால் முழுசையும் டிசைன் மொஸயிக்கிலே, இழைச் சிருக்கார் உங்கப்பா. மூஞ்சி தெரியற பளபளப்பு. என்ன செய்ய? அது மேலே தவழ்ந்து விளையாட ஒரு குழந்தைக்கு பிராப்தம் இல்லே'' பதில் பேசாமல் மாமியாரை வெறிப் பாள் பார்கவி.

பேச்சோடு பேச்சாகக் குத்திக் குதறும் மாமியார் இப்போது அமெரிக்காவிற்குப் போயிருந்தாள். ஒரு விதத்தில் நிம்மதி. யாருடைய குறுக்கீடும் இல்லாது தன் வீட்டில் தானே யஜமானியாக உலாவி வரலாம்.

பார்கவி மறுபடியும் தாய்மையடைந்து விட்டிருந்தாள். அமெரிக்காவில் அண்ணனுடன் தங்கப் போயிருந்த கண வனுக்குக் கூட அவள் தெரிவிக்க விரும்பவில்லை.

டாக்டர் ரேவதிதான் அந்த மகிழ்ச்சிகரமான சங்கதி யைச் சொன்னாள்.

நாத்தனார் பத்மா சென்னைக்கு ஒரு கல்யாணத்திற்கு வந்தவள் தம்பியின் வீட்டில் நாலுநாள் தங்கிவிட்டுப்போக வந்திருந்தாள்.

"உடம்புக்கு என்ன? எப்படியோ இருக்கிறாயே?'' துருவித் துருவி சந்தேகத்துடன் நாத்தனார் கேட்டபோது பார்கவி சிரித்து மழுப்பி விட்டாள்.

“ஏதேனும் விசேஷமோ!” பத்மா விடவில்லை.

“குழந்தை வேண்டாம்னு திட்டமிட்ட குடும்பமாச்சே. அத்தைமடிமெத்தைன்னு நீங்க அவசரப் பட்டா” வேண்டு மென்றே சிரித்தாள். மூன்று மாதம் உருவாகி விட்டிருந்த தன் வருங்கால வாரிசை எண்ணி மகிழ்ந்து கொண்டாள்.

அம்மாவுக்கோ, அண்ணாவுக்கோ, மன்னிக்கோ சிநேகிதிகள் யாருக்குமோ இப்போது அவள் தெரிவிக்கப் போவதில்லை. ஒரேயடியாக ஆறு மாதம் என்று ஆனபிறகு அம்மாவை உதவிக்கு அழைத்து வைத்துக் கொண்டு டாக்டர் ரேவதியிடமே பொறுப்பை ஒப்படைத்து விட வேண்டும்.

பத்மா ஊருக்குத் திரும்பியதும், கொஞ்சம் நிம்மதி யாகக் கடைத் தெருவிற்குப் போய், தனக்கு வேண்டியதை வாங்க புறப்பட்டாள் பார்கவி. அண்ணாசாலை புத்தகக் கடை ஒன்றில்தான் அவள் தன் தோழி சர்மிளாவை சந்தித்தாள்.

“நான் இப்பத்தான் பம்பாயிலிருந்து வரேன். தம்பி வீட்டிலே ஒருவாரம் ஓய்வாக இருக்க வந்திருக்கேன், உன்னை சந்திச்சதிலே எனக்கு ரொம்ப மகிழ்ச்சி” என்றவள் குரலைத் தாழ்த்தி, “உங்ககிட்ட ரொம்ப முக்கியமான விஷயம் பேசணுமே” என்றாள்.

ஏனோ பார்கவியின் நெஞ்சுக்குள் ஒரு குறு குறுப்பு!

“நாளைக்கி எங்க வீட்டுக்கு பகல் சாப்பாட்டுக்கே வந்துடு.” முகவரி, தொலைபேசி எண் எல்லாவற்றையும் ஒரு காகிதத்துண்டில் கிறுக்கி அவளிடம் கொடுத்தாள்.

மறுநாள் சர்மிளா சாப்பாட்டிற்கு வந்திருந்தாள். “அவர்கூட இல்லை. இப்போ இங்கே இந்த அல்லியோட தர்பார்தான்” சாப்பாட்டைப் பறிமாறிவிட்டு தானும் கூட சாப்பிட உட்கார்ந்தாள் பார்கவி.



சாப்பாட்டிற்குப்பின் முன்னறை ஹாலில் அமர்ந்தபடி வெற்றிலையை மென்று கொண்டிருந்த சர்மிளா அந்த சங்கதியை சொன்னாள்.

“ராதிகா மறைவு பற்றிக் கேள்விப்பட்டேன். என்ன ஆறுதல் சொல்றதுன்னே தெரியாததனாலே கடுதாசிகூட போடலை. உன்னைப்பத்தி நினைச்சு நான் பேசாம இருக் கவே முடியலை பார்கவி.”

பார்கவி தவித்துப் போனாள்.

“பேசினாலும் உனக்கு மனக் கஷ்டமாச்சேன்னு கவலையா இருக்கு.”

“சர்மிளா! குட்டையைக் குழப்பாது, வெளிப்படையா சொல்லேன்” உள் உணர்வில் எதையோ ஊகிக்க முடிந்து விட்ட பதட்டம்.

“பீ காக் பெயிண்ட்ஸ்”ஸின் மற்றொரு கிளை ஸ்தா பனம் பம்பாயில் இருக்கிறது தெரியுமில்லையா. அதிலே அக் கௌண்ட் செக்ஷனில் அனிதான்னு ஒரு பஞ்சாபி பெண் இருக்கா. அவளை நான் சில பார்ட்டிகளில் பார்த்திருக்கேன். அழகாக இருப்பாள். ஏகப்பட்ட சொத்துக்காரியாம். அப்பா கிடையாதாம். அம்மா மட்டும்..”

பார்கவியின் நெஞ்சு படபடத்தது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

“மூன்று மாசத்துக்கு முந்தி பம்பாய்க்கு உன் கணவர் கம்பெனி காரியமா வந்திருந்தார் இல்லையா?”

“ஆமாம்! அதுக்கென்ன?”

“பம்பாயிலே நமக்குத் தெரிந்த வட்டத்திலே ஒரு கிசு கிசு பரவியிருக்கு உன் கணவரைப்பத்தி. முதல்ல நானும் நம்பலே...ஆனா...”

“ஆனா?” பார்கவி நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"என் கண்ணாலேயே பாத்துட்டேன். அந்த அனிதா வோட மாதுங்கா காந்தி மார்க்கெட் வாசல்லே. அப்புறம், நேரு பிளானடோரியத்தில...

"வஜ்ரேஸ்வரி பக்கம் கூடப்பார்த்தேன். ஸாந்தா குரூஸ் வெஸ்ட்ல, எஸ். வி. ரோடு பக்கம் அடிக்கடி பார்த்திருக் கேன். என் கணவரும் இதைப் பத்தி ரொம்பக் கேள்விப் பட்டாராம். ஒரு நாள் "அக்பராலி" டிபார்ட்மெண்டல் ஸ்டோரில, இவர்களைப் பார்த்தாராம்—" சர்மிளா அதற்கு மேல் பேச முடியாது அவளையே பரிதாபமாகப் பார்த்தாள்.

இனம் புரியாத கலக்கமும் திகிலுமாக பார்கவி தோழியை உற்றுப் பார்த்தாள்.

"என் கணவர் கேள்விப்பட்ட விஷயம் ..."

"என்ன கேள்விப்பட்டாராம்!"

"அனிதாவிடம் ஒரே கிறக்கமாக இருக்கிறாராம் உன் கணவர். தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லி அவள் மிகவும் வற்புறுத்துவதாக...."

பார்கவிக்கு எல்லாமே விளங்கி விட்டது. அடி வயிற்றில் யாரோ நெருப்பைக் கொட்டியது போல ஒரு வேதனை ஊடுருவியது. தாங்க முடியாத ஒரு வலியில் துடித்துப் போனாள்.

"ஜாக்கிரதை! ஏதாவது அது இதுன்னு உன் கணவர் மிரட்டினால் நீ உடனே உங்கண்ணாவை, டெலிபோனிலே கூப்பிட்டு வரவழைச்சு, பக்கத்திலே வச்சுக்கோ. உங்கப்பா உசிரோட இருந்தா...குருமூர்த்தி இப்படி எல்லாம் ஆட்டம் போடுவாரா? உங்கப்பா நரசிம்மவதாரமே எடுத்திருக்க மாட்டாரா? மாமனார்கிட்ட சலாம் போட்டுண்டு இருந்தவர், எப்படி மாறிப் போய்ட்டார். எனக்கு பொறுக்கவே இல்லை பார்கவி" பொரிந்து கொட்டினாள் சர்மிளா.

பார்கவிக்கு 'ஓ' வென்றலற வேண்டும் போல் இருந்தது



"ஜாக்கிரதையா நீ இருந்துக்கோ பார்கவி. உன்னை எச்சரிக்கத்தான் நானும் இன்னிக்கி வந்தேன்." சர்மிளா நேயபாவத்துடன் கூறினாள்.

அன்று மாலையே டாக்டர் ரேவதியை அவசரமாக பார்கவி அழைக்க நேரிட்டு விட்டது.

"என்ன இப்படி? என்ன நடந்தது?" டாக்டர் உரிமை யோடு அதட்டினாள்.

"நீங்க சொன்னபடி நான் அதிகமாக வேலைகள் கூட செய்யலை. மாடிக்கு கூட ஏறி இறங்கலை. கீழ் அறையிலே தான் படுத்துக்கறேன். உதவிக்கு வீட்டோட எல்லாத்துக் கும் வேலைக்கார அம்மா இருக்காங்க. சமையலுக்கும் ஆள் இருக்கார்."

"பின்னே ஏன் இப்படி ஆச்சு?"

"சினேகிதியை சாப்பாட்டுக்கு வரச்சொல்லி இருந்தேன். நான்தான் சாப்பாடு பரிமாறினேன். வேலைன்னு சொன்னா, பரிமாறின வேலை ஒண்ணுதான்" சிரிக்க முயன்றாள் சோகமாக.

"மனசு திடுக்கிடறாப்போல...அதிர்ச்சியான விஷயம் ஏதானும் பேசினீங்களோ?"

டாக்டருக்கு ஜோசியம் தெரியுமா? அவள் அசந்து போனாள்!

"என்ன யோஜனை?" டாக்டர் மீண்டும் கேட்டதும் பார்கவியின் மனம் தளர ஆரம்பித்தது.

"ஆமாம்! சர்மிளா சொன்ன சங்கதியைக் கேட்டதும், எனக்கு அடிவயித்தில் சுரீர்னு ஒரு வேதனை ஏற்பட்டது...." அதற்குமேல் அவள் மனம் உடைந்து போனாள்.

விம்மலும் கண்ணீருமாக உண்மையைச் சொல்லி முடித்துவிட்டாள்.

பற்களைக் கடித்துக் கொண்டாள் டாக்டர் ரேவதி. "குழந்தை வேண்டாம்னு கலைக்கத் திட்டமிட்டு, மாடிப் படியில உருண்டு விழுந்தாலும், அசையாத குண்டுக்கட்டை யாக இருந்துகொண்டு பத்து மாதம் கழிச்சு குழந்தை பிறந்து தொலைக்கும். ஆனால் வேணும், வேணும்னு தவம் இருந்து இப்படி தாய்மை அடையறவங்களுக்கு, ஒரு மின்னலைப் பார்த்தாலும் போதும், கருச்சிதைவு ஏற்பட்டுடும். இது இயற்கை செய்யற வேடிக்கைகளிலே ஒண்ணு. என்ன செய்ய லாம். இனி நிறுத்த முடியாது. நேரா என் நர்ஸிங் ஹோமில வந்து ரெண்டு நாள் படுத்திரு. உடம்பை பழையபடி ஆக்கி அனுப்பிடறேன்." பெருமூச் செறிந்தாள் டாக்டர்.

வெளிநாட்டிலிருந்து குரு திரும்பி வந்தான். இடையே அவன் மனைவிக்கு கருச்சிதைவு ஏற்பட்டது எதுவுமே தெரி யாமல் போய்விட்டிருந்தது அவனுக்கு.

"இரண்டு நாள் தொடர்ந்து ஜுரம் அடிச்சுது. காமாலை ஜுரம்னு பயந்துண்டு ரேவதி நர்ஸிங் ஹோமில போய் செக்கப்பில் இருந்துட்டு வந்தேன்" அழுத்தமாக ஒரு பொய்யைச் சொன்னாள்.

வெளியூரிலிருந்து ஒரு வாரத்திற்கு முன்பாக திரும்பி விட்டிருந்தவன், பம்பாயில் ஏன் நீடித்து ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்தான் என்று அவளும் கேட்க வில்லை.

"கம்பெனி கணக்கு வழக்குகளை, வரவழியிலேயே பம்பாயில முடிச்சிட்டு வரவேண்டியிருந்தது" என்றான் சுருக்கமாக.

அவளுக்குத் தெரியும், எந்த கணக்கு வழக்கு என்று. ஆத்திரமும் பொறாமையும் நெஞ்சுக்குள் எரிமலையாகக் குமுறின. 'ஓ' வென்று கத்தி அவனுடன் சண்டைபோட வேண்டுமென்று உடலும், உள்ளமும் ஆவேசப்பட்டன.



டாக்டர் ரேவதிதான் முன்கூட்டியே மணிக்கணக்காக உட்கார வைத்து புத்தி சொல்லி அனுப்பியிருந்தாள்.

"உன் கணவர் ஊருக்கு வந்ததும் சண்டையை ஆரம் பித்து விடாதே. ஒன்றுமே தெரியாத மாதிரி சிரித்துக் கொண்டே பேசு. ஒரு சமயம் அவர் எரிஞ்சு விழுந்தாலும் கோபப்படாதே."

"கணவனே கண்கண்ட தெய்வம்னு இருக்கச் சொல் றீங்க. புரியறது."

"நீ இந்தக் காலத்து படிச்ச பெண்தான், ஒத்துக் கொள்கிறேன். எதிர்த்துப் பேசணும்னு நாக்குத் துடிக்கும். இல்லைன்னு சொல்லலை. ஆனால் ஒண்ணை மறந்துடாதே. உனக்கு ஒரு குழந்தை வேணும். அதுவும் ஆரோக்யமான ஒரு குழந்தை. அதற்கு அசாத்தியமான பொறுமை தேவை. சகிப்புத்தன்மை வேண்டும். உனக்கு ஏற்படக்கூடிய அதிர்ச்சி யைத் தாங்கிக் கொண்டு வாழ்க்கையை ஒரு சவாலா ஏத்துக்கற துணிச்சல் வேண்டும். ஞாபகம் இருக்கட்டும். அனிதாவைப் பத்தி எந்த விளக்கமும் கேட்காதே. எல்லா வற்றையும் விட தெய்வத்து மேல முழுநம்பிக்கை வை." எச்சரித்து விட்டிருந்தாள்.

"டவல் வைக்க மறந்திட்டியா? உனக்கு வர வர மூளையே மழுங்கிண்டு வரது." குளியலலைக்குள்ளிருந்து குரு கத்தினான். முன்போல் முகத்தில் எரிச்சலை அவள் காண்பிக்கவில்லை.

"மன்னிச்சுக்கோங்கோ, மறந்துட்டேன்" மெல்ல முறுவலித்தாள்.

"ராதிகாவைப்பத்தி இன்னும் நினைச்சுண்டு மாஞ்சு போறியோ" குத்தினான் அவன்.

"நீங்கதான் இப்போசத்தியா என் குழந்தை. உங்களைக் கவனிச்சு தினமும் ஆபீசுக்கு அனுப்பறதுக்குள்ளே பத்துக் குழந்தைகளை பள்ளிக்கூடம் அனுப்பிடலாம்." மெல்லிய தாகச் சிரித்து மழுப்பினாள்.

"இன்னிக்கி மானேஜிங் டைரக்டர் மகள் கல்யாணத்துக்கு ஹோட்டல் நந்தினியில் ஒரு ரிஸப்ஷன்."

"அதுக்கென்ன? நீங்க சாயங்காலம் வரதுக்குள்ளே நான் பரிசு பொட்டலத்தைக்கட்டி வச்சுண்டு தயாரா காத்துண்டிருப்பேன், கவலைப்படாதீங்கோ." உற்சாகம் தொனிக்கப் பேசினாள்.

ஒரு மனைவி தன் கணவன் முன் பல தகுதிகளிலிருந்து பணிவிடை செய்ய வேண்டுமென்று அம்மா அடிக்கடி அவளுக்கு போதிப்பது வழக்கம்.

அவள் ஒரு பத்தாம்பசலி. அப்பா மிகவும் கண்யமானவர். அதிகமான பணிவிடைகள்—அடிமைத்தனம் இதையெல்லாம் அவர் மனைவியிடமிருந்து எதிர்பார்த்தவரல்ல. அப்படியிருந்தும் அம்மா, அப்பா ஆபீஸிலிருந்து வரும் பொழுது ரொம்ப அட்டகாசம் செய்வாள்.

"அப்பா வந்தாச்சு. நகருங்கோ. இதென்ன குப்பை இங்கே?" அதட்டுவாள்.

"சத்தம் போடாதீங்கோ. அப்பா தூங்கறார்" கபர்தார் செய்வாள்.

அவளுக்குக் கை வந்த கலை அது. அதைப் பெண்ணுக்கும் உரு ஏற்ற முனைந்தாள்.

"நான் அவருக்கு மனைவி. அவருக்கு சரிநிகரா ஜோடி போட்டுண்டு, பார்ட்டிகளுக்குப் போய் பல விஷயங்களைப் பத்தி பேசத் தெரிஞ்ச படிச்ச மனைவி. அப்படி ஒண்ணும் குருவுக்கு அடிமை சாஸனம் எழுதிக் கொடுத்திட்டு வந்திருக்கலை" அம்மாவை அடக்கி விட்டிருந்தாள்.

ஆனால், அவளே இப்போது குரு கூப்பிட்ட குரலுக்கு சலாம் போடும் ஒரு அடிமையாக மாறிப் போயிருந்தாள்.

எல்லாம் ஒரு குழந்தைக்காக...தான் தாய் என்ற தகுதியைப் பெற்று, தலைநிமிர்ந்து எல்லோரையும் பார்க்கவேணும் என்ற சவாலுக்காக.

# 4

குருவும் தன் சுயரூபத்தைப் பதுக்கிக் கொண்டிருந்தான். ஒரு சில மாதங்கள் அவனும் அன்பானதொரு கணவனாக அனிதா விஷயத்தை அவள் தெரிந்து கொள்ளாதபடியே நடந்து கொண்டு வந்தான். மாதங்கள் விரைந்தன.

அன்று மாலை...அவள் டாக்டர் ரேவதியைப் பார்க்கப் போயிருந்தாள்.

அவள் சொன்ன செய்தியை, பார்கவியாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை. அத்தனை ஆனந்தம்!

அவள் மூன்றாம் முறையாகத் தாயாகப் போகிறாள். இரண்டு மாத கர்ப்பிணி.

கணவனைத் தன்னுடன் வற்புறுத்தி ரேவதி நர்ஸிங் ஹோமிற்கு மறுநாள் மாலை அழைத்துச் சென்றாள். டாக்டர் ரேவதியின் வாய் மூலமாக அந்த உண்மையைக் கணவன் அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை அவளுக்கு.

டாக்டர் ரேவதி தொண்டையைக் கனைத்துக் கொண்டாள்.

"மிஸ்டர் குருமூர்த்தி! உங்களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்கள். நீங்கள் விரைவில் தந்தையாகப் போகிறீர்கள்."

பேயைக் கண்டது போல முகம் வெளுத்துப் போனான் அவன்.

"மறுபடியுமா?" சற்றுக் காரமாக, கோபமாக வார்த்தைகள் வெளிப்பட்டன.

“பார்கவி சின்னப்பெண்தானே. தாயாக வேண்டிய நல்ல இளம் வயசு. இந்தச் சமயத்தில் குழந்தை பெற்றுக் கொள்ளாமல் தள்ளிப் போட்டால்?” டாக்டர் முடிக்கவில்லை...

“அதைச் சொல்லவில்லை டாக்டர். உங்களுக்கு ராதிகாவின் சங்கதி பூராவும் தெரியுமே. நியூரோ ஸர்ஜன், நியூரோ பிஸிஷியன் எல்லோருமே பார்த்து ஒரு முடிவுக்கு வந்தாகி விட்டது. டாக்டர் டெய்லரின் ரிப்போர்ட்டைக் கூட உங்களிடம் கொண்டு வந்து காட்டியிருக்கிறேன் மறந்துட்டீங்களா?

“மறக்கலையே!”

“பார்கவி இனி தாயாகவே கூடாது. அப்படி ஏற்பட்டால் அதை வளரவிடக் கூடாதுன்னு பெரிய டாக்டர்கள் அபிப்ராயம்.”

“கடவுளின் அபிப்ராயம் வேறாக இருந்தால்?”

“ஸயன்டிபிக்கா பேச வேண்டிய டாக்டர் நீங்கள். நீங்களே இப்படிப் பேசினால்...ஜெனிடிக் கோளாறினால் ஒரு ஆரோக்கியமான குழந்தை அவளுக்குப் பிறக்க சாத்தியமே கிடையாது. அமெரிக்காவில் என் அண்ணனோட மச்சினி, ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறா. இப்போ, அங்கே நான் போயிருந்தப்போ கூட, இதைப்பத்தி விவரமா அவள்கிட்ட கேட்டேன். டாக்டர் டெய்லரின் அபிப்பிராயத்தை அவளும் ஒத்துக் கொள்கிறாள்.”

“ஆனால் நான் ஒப்புக்கொள்ளலை மிஸ்டர் குருமூர்த்தி! டாக்டர்களுக்குள்ளே அபிப்ராய பேதங்கள் ஏற்படுவது சர்வ சகஜம். நீங்க இரண்டு பேரும் கல்யாணத்திற்கு முன்னால் நெருங்கின உறவுக்காரர்கள் அல்ல. இந்த மாதிரி கோளாறான குழந்தைகள் உங்கள் உறவில் எவருக்கும் கிடையாது. ஜெனிடிக் தகராறுகள் நாற்பத்தேழு தலைமுறையிலிருந்து கூட வரக்கூடும். பார்கவியின் பரம்பரையில் வந்த கோளாறு இது என்று அவள் மேல் ஏன் முத்திரை குத்த வேண்டும்? ஏன், இதுவே உங்கள் பரம்பரையில் நாற்பத்தேழு தலைமுறைக்கு முன் ஏற்பட்ட ஒரு கோளாறாக இருக்கக்கூடாது. இந்த ஜெனிடிக் தியரி என்பது ஒரு சமுத்திரம். அதிலே நமது அபிப்ராயங்கள் ஒரு கடலில் பெருங்காயத்தைக் கரைப்பதற்கு சமம். மேலும் இந்த தியரி பார்கவி சம்பந்தப்பட்டவரை சரிப்பட்டு வராது.”



குருமூர்த்தியின் முகம் ஆத்திரத்தால் ஜிவ்வென்றாகி விற்று.

“இதையெல்லாம் மறந்துட்டு மாங்காட்டுத் தாயாரை திர்க்கமா நம்பிண்டிரு. இந்த முறை ஜாக்கிரதையாக உங்க மனைவியைக் கவனிச்சுக் கொள்ளுங்கள், மிஸ்டர் குருமூர்த்தி. நிச்சயம் ஒரு ஆரோக்கியமான குழந்தை பிறக்க சாத்யக்கூறுகள் இருப்பது புரியும்.”

‘ரேவதி அம்மா. நீ டாக்டர் அல்ல. பேசாமல் நர்ஸிங் ஹோமை மூடிட்டு அந்த மாங்காடு காமாட்சி கோவிலருகிலே ஒரு பஜனை மடம் கட்டிண்டு ஜால்ரா போட்டுண்டு இரு’ சொல்ல வேண்டும்போல பற்றிக்கொண்டு வந்தது குருவிற்கு.

ஒரு அலுவலகத்தில் பெரிய பதவி வகிப்பவன். தாறுமாறாகப் பேசலாமா? தகுதிக்கு அழகா? பற்களைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தை அடக்கினான்.

“மறுபடியும் ஒரு மண் பொம்மைக்கு பார்கவி தாயாகி விட்டால்? இப்படி அதிர்ச்சி ஏற்படராப்போல மனதுக்கு சங்கடம் ஏற்படராப்போல அவளிடம் நீங்க நடந்து கொள்ளக்கூடாது. கஷ்டமான சங்கதிகளைக் கேட்டால் கூட அவளுக்கு கருச்சிதைவு ஏற்படலாம். அதனால் நீங்க பார்கவிகிட்ட அன்பா மென்மையா. நடந்துக்கணும். விஷ் யூ குட்லக்” டாக்டர் ரேவதி விடை கொடுத்தாள்.

குருமூர்த்தி மனைவியை வீட்டில் இறக்கிவிட்டவன் வெளியே சென்றுவிட்டான். அன்றிரவு வெகுநேரம் சென்ற பிறகே வீடு திரும்பினான்.

அந்த வேளையில் கூட பார்கவி தட்டைக்கழுவி மேஜை மீது வைத்தாள். சாப்பாட்டைப் பரிமாற ஆயத்தமாக இருப்பதைக் கண்ட அவன் கோபத்திலும் சிரித்தான்.

“ரொம்ப நேரம் கண் விழிச்சுண்டு இருந்தால் உடம்புக் காகாதுன்னு உன் டாக்டர் சினேகிதி ஆலோசனை சொல்லி யிருப்பாளே, இனி மேலே நான் வெளியிலே தங்கிக் கொண்டு விட்டால் உனக்கு சௌகரியமாக இருக்கும்னு நினைக்கறேன். உன் உடம்புக்கு ஓய்வு தேவையாச்சே!”

ஏளனமான அவனது பேச்சுக்கள் மனதை உறுத்தின. பொங்கிய கோபத்தை புன்னகையில் மறைத்துக் கொண் டாள் பார்கவி

“ஆபீஸில் ஓவர்டைம் வேலை இருந்தது போல இருக்கு. அதான் கோபம் வரது.” பொறுமையாக பேசியபடி சமா தானப் படுத்த முயன்றாள்.

“சாப்பாடு வேண்டாம். வெளியிலேயே முடிச்சிண் டாச்சு. இனிமேல், ராத்திரி சாப்பாட்டை வெளியே வச்சிக் கிறதா யோசனை.” சொல்லியபடியே வேகமாக மாடிப் படியேறி, மேலே தங்கள் அறைக்குள் போய்விட்டான்.

படிகளைத் தவிர்க்க வேண்டுமென்று டாக்டர் ரேவதி சொன்னதை மறக்காது அவள் தன்னந்தனியே கீழே இருந்த சிறிய அறையில்தான் உறங்கினாள். சமையற்கார சாம்பு ஹாலிலிருந்து விட்ட குறட்டை ஒலி கேட்டுக் கொண்டு இருந்ததால் அவள் வெகுநேரம் உறங்கவில்லை.

தூக்க மாத்திரைகள் சாப்பிடக் கூடாது என்பது டாக்டரின் கட்டளை. வெகுநேரம் தூக்கம் வராமல் படுக்கை மீது புரண்டாள்.



ஒருவார காலமான பின் ஒரு நாள் காலை வேலைக்குப் போகுமுன் குருமூர்த்தி மனைவியை அழைத்தான்.

“சாயங்காலம் தயாராக இரு. நான் உன்னை நம்ப டாக்டர் மாலினி கிட்ட அழைச்சுண்டு போறேன்.”

பார்கவி அவனை ஊடுருவியபடி பார்த்தாள். பொறுமை! பொறுமை! பொறுமை! மனம் உபதேசித்தது.

“டாக்டர் ரேவதிகிட்ட பாத்தாச்சு. இப்ப வேற டாக்டர் கிட்ட போய்ப் பார்க்கத் தேவையில்லே” நிதானமாகக் கூறினாள்.

“என் பேச்சை நீ கேட்டாகணும்னு நான் உன்னை வற்புறுத்தப் போறேன். உனக்குக் குழந்தை பிறக்கக் கூடாது. அதுக்கு நீ தகுதியத்தவள்னு நிரூபணம் ஆகிட்ட பிறகும், வீண் வம்புக்காக, இப்படி நிக்கறது சரி இல்லே” உறுமினான் அவன்.

“கடவுள் எனக்கு அப்படி ஒரு முத்திரை குத்தலேன்னு நான் நம்பறேன்.”

“உன் நம்பிக்கையைக் கொண்டு உடப்பிலே போடு.”

“உங்களுக்கு எப்போ இருந்து கடவுள் நம்பிக்கை போச்சு...புது சகவாச தோஷமோ?” புன்னகைத்தாள் அவள்.

“என்ன சொல்றே?” உறுத்து விழித்தான் குரு.

“உண்மையைச் சொல்றேன்.”

“என்ன அப்படிப்பட்ட உண்மை?”

“வீணா என்கிட்ட தர்க்கம் பண்ணக் கூடாதுன்னு டாக்டர் சொன்னதை மறக்க வேணாம். எனக்கு அனிதா விஷயம் தெரியும். அவளோட பம்பாயிலே எங்கெல்லாம் சுத்தினேள்னும் தெரியும்.” நறுக்காக கூறி முடித்தாள் பார் கவி.

குருமூர்த்தியின் முகம் சுருங்கிப் போயிற்று. சட்டென சமாளித்தபடி, ''தெரியுமில்லையா? இப்ப என்ன செய்யப் போறே?'' என்றான் குரோதமாக.

''இந்தக் கேள்வியை நீங்க ஆண் பிள்ளைங்கறதினால, சுலபமா கேட்டுட முடிஞ்சுது. ஏன்னா, சமூகத்தின் பார்வையே அவங்களைப் பத்தி வேறா நினைக்கும் என்கிற ஆண் பிள்ளைத்தனம்.'' உறுதியுடன் பேசினாள்.

''நீ மெத்தப் படிச்சவங்கிற திமிர், ரொம்பப் பேசாதே.'' கையை ஓங்கிக் கொண்டு அருகில் வந்தவனைக் கண்டதும் அவளே ஒருகணம் திடுக்கிட்டுப் போனாள். நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டது. அவளையுமறியாமல் இடது கையால் அடிவயிற்றைச் சட்டென்று பிடித்துக் கொண்டாள்.

''மாங்காட்டுத் தாயே, என் குழந் தையைக் காப்பாத்து'' தனக்குள்ளாக, அந்த தெய்வத்தின் பெயரை உதவிக்குக் கூப்பிட்டபடி கணவனை உறுத்துப் பார்த்தாள்.

''கை ஓங்கற வழக்கத்தையெல்லாம், உங்க ஊரோட வச்சுக் கொள்ளுங்கோ. பெரிய ஆபீசர்னு பதவி வகிச்சுட்டா மட்டும் போறுமா?''

''என்ன சொன்னே?'' அவன் கண்ணும் முகமும் சிவக்க மேலும் ஒரு அடி முன்னேறினான்.

சட்டெனத் தன் அறைக்குள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டாள் அவள்.

''கதவைத் திற!'' ஆத்திரமாகத் தட்டினான் அவன்.

''இப்படி கலாட்டா செஞ்சா வேலைக்காரர்கள் சிரிப்பா.''

''திறக்காட்டா நான் சாயங்காலம் இந்த வீட்டுக்குள்ளே வரமாட்டேன். சாயங்காலம் பிளேனில் பம்பாய் போயிடுவேன். நீ சொன்னியே அந்த அனிதாவோட சுத்தப் போறேன்'' பயமுறுத்தினான்.



''உங்க இஷ்டம்.''

''பணத்திமிர். உங்கப்பன் சொத்து வச்சுட்டுப் போயிருக்காங்கிற திமிர்!'' கதவைக் காலால் எட்டி உதைத்தான் குருமூர்த்தி.

''அவர் உசிரோட இருந்தா நடக்கிறதே வேறே!''

''இப்பத்தான் உங்கண்ணன் இருக்கானே. அவனைக் கூப்பிட்டுக் கட்டிக்கொண்டு அழு. உன் வீண் பிடிவாதம் நம்மைப் பிரிச்சு வைக்கப் போறது. மறுபடியும் ஒரு மண் பொம்மைக்கு என்னை அப்பனாக்கி அவமானப்படுத்தறதை நான் தாங்கிக்கமாட்டேன். ஆமாம்!''.

அவள் பதில் பேசாதது அவனது கோபத்தை அதிகப் படுத்தியது.

''என் பேச்சைக் கேக்கலைன்னா, அப்புறமா நீதான் வருத்தப்படுவே. அனிதாவை உன் ஸ்தானத்திலே வச்சுக் கொள்ள எனக்கு ரொம்ப நாழியாகாது.''

பார்கவி பேசவில்லை.

''எனக்கு அடுத்த மனைவி கிடைப்பா. உனக்கு மறுபடியும் புருஷன் கிடைப்பானா? ரொம்பக் கஷ்டம்'' கத்தினான் உரத்த குரலில்.

பார்கவி காதுகளைப் பொத்தியபடி, ''காமாக்ஷி? காமாக்ஷி!'' என ஜபித்துக் கொண்டிருந்தாள் அறைக்குள்.

டக், டக்கென்று பாதணி ஒலிக்கும் சப்தமும் தொடர்ந்து கார் வெளியேறும் ஒலியும் கேட்டதும், முகம் வெளிற மூச்சிறைக்க நெஞ்சு பதைக்க, அறையை விட்டு வெளியே வந்தாள் பார்கவி.

சிவராமன் காலத்திலிருந்து சமையற்கார சாம்பு அவர்கள் வீட்டில் வேலை பார்க்கிறார். இருபது வயது இளைஞனாக சமையற்கட்டில் வளைய வந்தவர் இப்போது வெள்ளையும்,

கருப்புமாக முடி வெளுத்து வாட்டசாட்டமான முதுகிலே ஒரு சிறு கூனல் விழுந்து முதுமையை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்தார்.

பாண்டியன் தன் பெண்ணுக்கு சீதனமாகப் புகழேந்திப் புலவரைச் சோழ நாட்டிற்குத் தந்தது போல், சிவராமன். தம் வீட்டு நெடுநாளைய அறுசுவை வேந்தரை, மகளுக்காக மாப்பிள்ளை வீட்டுக்கு அனுப்பி விட்டிருந்தார்.

பார்கவியை குழந்தை முதல் பெற்ற மகளைப் போல பாவித்தவர் சாம்பு. சமீப காலமாக வீட்டில் நடக்கும் சம்பவங்களை அவரும் பார்த்துக்கொண்டுதான் இருந்தார். இருப்பினும் அனாவசியமாகத் தலையிட்டுக் குழப்பிக் கொள்வது தமது தகுதிக்கேற்றதல்ல என்று ஒதுங்கியபடி மௌனம் சாதித்தார்.

அவருக்கு அரைகுறையாக ஆங்கிலம் தெரியும். அவர்கள் பேசியது புரிந்துவிட்டது.

"குழந்தை வேணும் என்று அந்தப் பெண் தவமிருக்கா. அதை வேண்டாம்னு அழிக்கச் சொல்றானே! அனிதான்னு இன்னொருத்தியோட அலையப் போறானாமே...என்ன கர்வம்...?" மனம் குமைந்தது அவருக்கு.

குக்கரை இறக்கியவர் அடுப்பை அணைத்தார். முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக்கொண்டார். சாத்துக்குடிப் பழத்தை நறுக்கிப் பிழிந்தார். சாறு பிழிந்த தம்ளர் சகிதம் பார்கவியிடம் வந்தார்.

"அம்மா பார்கவி! (அவர் அடிநாளிலிருந்து அப்படித் தான் அழைப்பது வழக்கம்)டாக்டர் சொன்ன டயட்டை மறந்துட வேண்டாம். பழரசம் சாப்பிடணும் இப்போ" என்றார் கனிவாக.



பார்கவியின் உதடுகள் துயரால் துடிப்பதைக் கண்டதும் மனம் கரைந்து போனார் அவர்.

"நான் சொல்றதைக் கேட்பியாம்மா. நாளைக்குச் செவ்வாய்க் கிழமை. நாளையிலேருந்து ஆறு வாரம் விடாம மாங்காட்டுக்குப் போய்ட்டு வந்துடும்மா. அவளால் சாதிக்க முடியாத அற்புதங்கள் எதுவும் இல்லைம்மா. அனுபவத்தின் பேரில சொல்றேன். டாக்டர், மருந்து இதுகளுக்கும் அப்பால ஒரு சக்தி நிச்சயமா இருக்கும்மா. அந்த சக்தியை ஜெயிக்க யாராலும் முடியாது. நம்பிக்கை உடையவன் அதை தெய்வம்னு சொல்றான். இல்லாதவன் இயற்கையின் அற்புத சக்திங்கறான். பெயர்ல என்னம்மா இருக்கு? நம்ம மனசு, நம்பிக்கையில்தான் எல்லாமே இருக்கு."

"சாம்பு மாமா என்ன சொல்றேள்?" பார்கவி தடுமாறி னாள்.

"எல்லாம் கேட்டுண்டிருந்தேன். வரவர மாப்பிள்ளை ரொம்பவே மாறிப் போயிருக்கார். இருக்கட்டும். எல்லாத் தையும் அம்மாகிட்டே சொல்லி முறையிட்டுக்கோ. அவள் கண்ணைத் திறந்து ஒரு துளி பார்த்தா போறும்மா. மனசை தளரவிடாதே."

பார்கவியின் கண்களில் நீர் துளித்தது. "கண்களைத் துடைச்சிக்கோ. பழரசத்தைக் குடி. ஏதாவது நிம்மதியா படிச்சுண்டு இரு...உனக்குப் பிடிச்ச சமையல் இன்னிக்கு. சரியா டாண்ணு பன்னண்டு மணிக்கு தட்டை வச்சுடுவேன், கடைகண்ணிக்கு எங்கயாவது போய்ட்டு வரணும்னா. வெய்யில் ஏறரதுக்கு முன்னே போய்ட்டு வந்துடு." மிகக் கனிவான குரலில் சாம்பு சொன்னபோது 'ஓ'வென அழ வேண்டும் போல் பார்கவிக்குத் தோன்றியது.

# 5

அன்று மாலை இருட்டுவதற்கு சற்று முன்பு வாயிலில் கார் வந்து நிற்பதைக் கண்டு எட்டிப் பார்த்தாள் பார்கவி. மன்னி நாராயணியும், அம்மாவும் பங்களூரிலிருந்து பறந் தோடி வந்திருந்தனர்.

"சாம்பு டெலிபோன் பண்ணினான். நீ கடைக்குப் போயிருந்தியாம். உடனே அண்ணா காரை எடுத்துண்டு போங்கோன்னு நெட்டித்தள்ளி அனுப்பிட்டான். மாப் பிள்ளை ரொம்ப கூத்தடிக்கிறாராமே. ஆமாம், நீ உண்டா யிருக்கிற விஷயத்தைப் பத்தி ஒரு வார்த்தை கூட சொல்லாம இருந்தியே. இது நியாயமா?" அம்மா படபடவென பேசிய படி மகளைத் தழுவிக் கொண்டாள்.

குருமூர்த்தி அவளைப் பயமுறுத்தியது போலவே அன்று அலுவலகத்திலிருந்து பம்பாய்க்குப் பறந்துவிட்டிருந்தான்.

மறுநாள் காலை... பத்மா ஒரு டாக்ஸியில் வந்து இறங் கினாள். தனக்கு முன்னால் பங்களூரிலிருந்து பார்கவியின் அம்மாவும், மன்னியும் விழுந்தடித்துக் கொண்டு வந்திருப் பார்கள் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

"திரிசமன்! பிறந்தகத்து மனுஷாளை வரவழைச்சுண் டுட்டாளே!" உள்ளூரப் பொருமினாள்.

அடுத்த வீட்டாரின் டெலிபோன் மூலம் தொடர்பு கொண்ட குருமூர்த்தி, அக்காவை அழைத்து, உடனடியாக அவள் சென்னைக்குப் போய் பார்கவியிடம் பேசி, கருச்சிதை விற்கு ஒத்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தான். பயணச் செலவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று அவன் கூறிவிட்டதால், வேப்பிலைக் கொத்தை ஒடித்துக் கட்டிக் கொண்டு விட்ட ஆவேசத்தில் புறப்பட்டு வந்தாள் அவள்.



குளித்துவிட்டு முகத்தில் கடுமை தொனிக்க காப்பி சாப்பிட சாப்பாட்டறைக்குள் வந்தாள் பத்மா. மற்றவர்கள் மரியாதைக்காக அங்கே காத்திருந்தனர்.

"சாம்பு நீங்க இட்லி, சாம்பார், காபி எல்லாத்தையும் வெச்சிட்டு, உங்க வேலையைப் பாருங்கோ. நாங்க கொஞ்சம் குடும்ப விஷயம் பேசப் போறோம்" அதட்டலாகக் கூறினாள் அவள்.

சாம்பு நமட்டுச் சிரிப்புடன் உள்ளே போய் மறைந்து கொண்டார்.

சாப்பாட்டறைக் கதவை பட்டெனச் சாத்தி விட்டு வந்து உட்கார்ந்தாள் பத்மா. "முதல்லே சாப்பிடுவோம். அப்புறம் பேச வேண்டிய விஷயம் இருக்கு."

காலை ஆகாரம் விரைவாகவே முடிந்தது. வயிறு நிறைந்திருந்ததைப் போல ஆத்திரமும் நிறைந்திருந்தது பத்மாவின் மனதில்!

"உங்கபெண் வேலையாத்தானிருக்கும்னு நினைச்சேன். அவசரமா ரெண்டு பேரும் புறப்பட்டு ஓடிவந்திருக்கேளே' ஒரு விஷயத்துக்கு அதுவும் நல்லதாப் போச்சு-ஏன்னா உங்க மூணு பேருகிட்டேயுமே பேச வேண்டிய சங்கதிதானே இது" பத்மா ஆரம்பித்தாள்.

நாற்காலிகள் மீது அசையாமல் அமர்ந்திருந்தனர் மற்ற மூவரும்.

"பணம், காசு, பதவின்னு நாங்க ஏமாந்து போயிட் டோம். ஒரு ஆரோக்யமான குழந்தையைப் பெத்துக்கத் தகுதியில்லாத பெண்ணை, அவன் தலையில் கட்டினது எங்க தப்புத்தான். ஆனா அதே தப்பை மறுபடியும் அந்தப் பெண் செஞ்சா, நாங்க அனுமதிக்க மாட்டோம், நன்னா கேட்டுக் கோங்கோ."

தங்கம்மா சுபாவத்தில் பயந்தவள். பேச முடியாது அவள் உதடுகள் துடித்தன. மகளைக் குழப்பமாகப் பார்த்தாள்.

நாராயணி தொண்டையைச் செருமிக் கொண்டாள் 'நாங்களும், பணத்தையும், காசையும் செலவு செய்து, கிளியை வளர்த்துப் பூனை கையில குடுத்துட்டமேன்னு வேதனைப் படறோம். தெரிஞ்சுக்கோங்க'' ஆரம்பித்தாள்.

"அந்தக் குறை எங்க பக்கத்திலிருந்துதான் வந்ததுன்னு எப்படி சொல்ல முடியும்? உங்க வீட்டிலேருந்து வந்த பாவம்னு நாங்க நினைக்கறோம். ஆறு குழந்தைகளுக்குத் தாயாக இருந்தும் உங்களுக்கு ஏன் இப்படி ஒரு கெட்ட புத்தி? தம்பிக்கு இனிமேல நல்ல ஆரோக்யமான குழந்தை பிறக்கும்னு ஏன் நினைக்கக்கூடாது? காரணம் எங்களுக்கும் தெரியும். உங்க குழந்தைகளில் ஒண்ணை, ஸ்வீகாரமா, தம்பி தலையில கட்டிட்டா, அப்பிடியே சொத்தை அள்ளிக் கலாமே...! ஆனா பாவம் இப்ப பார்கவி அம்மாவாகப் போறான்னதும் ஆத்திரம் பிச்சுக்கறது. உங்களோட கோர மான யோசனையை நாங்க யாரும் ஒத்துக் கொள்ள மாட் டோம். அவளுக்குத் துணையாப் பேச, இங்கே வீடு கொண்ட மட்டும் மனுஷா இருக்கா, தெரிஞ்சு கொள்ளுங்கோ'' பொழிந்து தள்ளினாள் நாராயணி.

"அதான் தெரியறதே! மெட்றாஸ் ரெஜிமெண்டே புறப்பட்டு வந்தாப்பல வந்திருக்கேளே!''

"உங்க தம்பிக்கு என் கணவரோட பேச துணிச்சல் இல்லே. பம்பாய்க்கு ஓடி மறைஞ்சி உங்களை ஏவி விட்டிருக் காரா? பேஷ்!'' நாராயணி கோபத்தில் பத்மாவை சாடி னாள்.

"அவன் ஒண்ணும் ஒளிஞ்சுக்கலை. இங்கே முடிவு என்னன்னு தெரிஞ்சுண்டுதான் வருவான்?''

"அதான் தெரிஞ்சுட்டுதே? பார்கவி முழுசா குழந்தை யைப் பெத்துக்கப் போறா...நாங்கள்ளாம் கூட இருந்து உதவி செய்யப் போறோம்.''

"ராதிகா போல இதுவும் இருந்துட்டா...''



"நல்ல அழகான அத்தை நீங்க! உங்க வாயாலேயே நச்சு நச்சுன்னு இப்படி சொல்றது நன்னாவே இல்லை.''

பார்கவி இடைமறித்தாள். பத்மாவை மூர்க்கமாக வெறித்தாள்.

"அப்படியே இருந்தாலும் அந்தக் குழந்தையைக் கைவிடமாட்டேன். நான் கட்டாயம் வளர்ப்பேன். ராதிக அப்படிப் பிறந்தது அவளோட தப்பில்லே. எங்களுக்கு அவள் குழந்தையாக வந்து பிறக்கணும்னு அவளா துடிச்சா? எங்க ளோட ஆசையின் பலன் அவள். அதுக்காக எங்களை நாங்களே நொந்து கொள்ளணுமே தவிர, குழந்தையை நோகறதில என்ன புண்ணியம்? ஊனமான குழந்தைன்னு, அதை குப்பைத் தொட்டியில வீசிட முடியுமா? நான் அப்படிப் பட்ட மிருகம் இல்லே. நான் ஒரு தாய்.''

"உங்கப்பன் வாயை நன்னா பெருக்கி வச்சிருக்கார்.''

"நியாயமானதை சிந்திச்சு பாக்க கல்வி அறிவை கொடுத்திருக்கார்.''

"செத்தவாளையெல்லாம் ஏன் இழுக்கணும். இது வாழறவாளோட பிரச்சினை'' நாராயணி நடுவில் புகுந்து கத்தினாள்.

"எங்க வீட்டுப் பொண்ணுக்கு நிறைய ஓய்வு வேணும். மனச்சங்கடமான விஷயங்கள் எதையுமே இப்ப பேசக் கூடாது. அவள் மனசாலயும், உடம்பாலயும் ரொம்ப அலண்டு போயிருக்கான்னு டாக்டர் சொல்லியிருக்கார்.''

"அப்ப நீங்கள்ளாம் இங்கேயே இருங்கோ. நான் இன் னிக்கே ஊருக்குக் கிளம்பிடறேன். இது உங்க வீடு. பார்கவி உங்காத்துப் பொண். ராஜரீகம் பண்ண ரெண்டு பேர் புறப்பட்டு வந்திருக்கேள்'' கொடுமை தொனித்தது பத்மாவின் குரலில்.

"உங்க இஷ்டம்'' நாராயணி அசட்டையாகப் பேசியது பத்மாவைச் சுட்டது.

புக்ககத்திலே மிகவும் மதிக்கப்பட வேண்டிய உறவுக்காரி அவள். நாத்தனார்! 'எத்தனை அலட்சியமாக பார்கவி, வாயை மூடிக்கொண்டு மன்னியை ஏவி விட்டுட்டு...

"போறதுக்கு முன்னே ஒண்ணு சொல்லிட்டுப் போறேன் தன் இஷ்டத்துக்கு ஒத்துக்கொள்ள பார்கவி, மறுத்து அடம் பிடிச்சா, அவன் விவாகரத்து பண்ணிட தீர்மானிச்சிருக்கான்" மிரட்டலாகக் கூறினாள்.

"இந்தத் தீர்மானம், அந்த அனிதாவைப் பார்த்தப்பவே உங்க தம்பி மனசிலே உருவான விஷயம். இப்ப பார்கவி ஒரு சாக்கு...பூச்சிக்கெல்லாம் இந்தக் காலத்துப் பெண்கள் பயப்படமாட்டா. வேண்டாத பெண்டாட்டி கைபட்டா குத்தம். கால்பட்டா குத்தம்கிற காலம் மலையேறிடுத்து காலமுச்சூடும் ஒத்தனோட இப்படி வாழறதைவிட, நிம்மதியா பிரிஞ்சே இருக்கத் துணிஞ்சிடுவா இந்தக் காலத்துல."

பத்மா சுள்ளென்று பார்த்தாள்.

"இதனாலே எங்க குடும்பத்துக்கு அவமானம்னு நீங்க சந்தோஷப்படலாம். ஆனால், பல வீடுகளிலே இப்ப நடக்கறது இதான். தம்பதிகள் பிரியறா, கொஞ்ச நாள் ஊர் வம்பு பேசும். பிறகு வாயை மூடிக்குவா. அதுலயும் பெண்ணைப் பெத்தவா பேசவே மாட்டா, ஏன்னா, நாளைக்கி அவா வீட்லயும் இப்படி ஒண்ணு நடக்காதுன்னு என்ன நிச்சயம்? உங்க தம்பி மேற்கொண்டு பேசணும்னா, அதை பார்கவி அண்ணாகிட்ட பேசட்டும். பார்கவியோட பிரசவம்வரை நானோ, என் மாமியாரோ இங்கே இருந்து உதவி செய்யப் போறோம். நிச்சயம்" நாராயணி ஆவேசமாக வார்த்தைகளைக் கொட்டினாள்.

அன்று இரவே பத்மா, மதுரைக்கு மூட்டையைக் கட்டி விட்டாள்.

நாராயணி சில தினங்களில் ஊருக்குத் திரும்பிவிட்டாள். அவளுக்குப் பதில் அண்ணா ஹரி 'லீவு' எடுத்துக்கொண்டு வந்தான். தங்கம்மா மகளை விட்டு அசையாமல் கவனித்துக் கொண்டாள்.

# 6

இரண்டு வாரங்களுக்குப் பின்னர் பம்பாயிலிருந்து திரும்பி வந்த குருமூர்த்தி கோபாவேசமாக வீட்டினுள் நுழைந்தான்.

முன்னறையில் பத்திரிகை ஒன்றில் ஆழ்ந்திருந்தாள் பார்கவி.

"உனக்கு என்ன நெஞ்சழுத்தம். எங்கக்காவை வீட்டை விட்டு ஓட்டினாயாமே. உன் மன்னி அவளைக் கண்டபடி பேசறதைக் கேட்டு சிரிச்சுண்டிருந்தியாம். திமிர் பிடிச்ச பேயே!" இரைந்து கையை ஓங்கிக் கொண்டு வந்தவனை இரு உறுதியான இரும்புக் கரங்கள் பின்புறமிருந்து பிடிப்பதை உணர்ந்து திடுக்கிட்டுத் திரும்பினான்.

சமையல்கார சாம்பு கோபத்துடன் நின்றார்.

"சமையல்காரா! உனக்கு இத்தனை அதிகாரமா? வீட்டு மாப்பிள்ளையை அடிக்கவா புறப்பட்டேள்? பேஷ்! பார்கவிக்கு நீர் பாடிகார்டா? அது மட்டுமா....இல்லே.."

"மாப்பிள்ளை ஸார்! ரொம்ப மட்டமா பேசினா உம்ம தருதிக்கு நன்னாயிருக்காது. கர்ப்பிணிப் பெண்ணை கை தொட்டு அடிக்கறது ரொம்பத் தப்பு. படாத எடத்துல பட்டா உயிருக்கே ஆபத்தாகிடும்னுதான் உங்களைத் தடுத்தேன். இந்தக் குழந்தையை நான் மார் மேலயும் தோள் மேலேயும் போட்டு வளர்த்தேன். என் பேத்திக்கு சமம். நீங்க பேச வேண்டியதை அவ அண்ணாகிட்ட பேசிக் கொள்ளுங்கோ. அட அவரே வரார்" சாம்பு நகர்ந்து விட்டார்.

"மாப்பிள்ளை பம்பாயிலேருந்து இப்பத்தான் வந்தாப்பலயா?" கேட்டபடி உள்ளே நுழைந்த ஹரியை, நிமிர்ந்து பார்க்கவும் துணிவின்றி ஒரு கணம் தடுமாறினான் குரு.

"இங்கே ரொம்ப நேரம் தங்கற உத்தேசமில்லே."

"சுருக்கமா சொல்லலாமே?"

"எனக்கு இந்தக் கல்யாணத்திலேருந்து விடுதலை வேணும்."

"அதுக்கு என் தங்கையை அடிச்சு, உதைச்சா கிடைச்சிடுமா? சட்டப்படி நீங்க நடவடிக்கை எடுங்கோ. ஏன்னா, சுலபமா என் தங்கை விட்டுக் குடுப்பான்னு தோணலை. கோர்ட் இருக்கு. இதுக்குன்னே பிரபலமான வக்கீல்களும் இருக்கா. பார்ப்போம்" நிதானமாகப் பதிலிறுத்தான் ஹரி.

"அப்போ கோர்ட்டில சந்திக்கலாம்னா எனக்கு இங்கே எந்த உறவுமில்லை...இல்லியா?" எரித்து விடுவது போல் பார்த்தான் குரு.

"நீங்களா கற்பனை செய்துகொண்டால்..."

"ஷட்அப்! யூ..." பற்களைக் கடித்தான் குரு. வார்த்தைகள் உறைந்த நிலையில் வெளியேறி விட்டான் அவன்.

கண்களில் பொங்கிய நீரைச் சமாளித்த பார்கவி மனதிற்குள் பொறுமை, பொறுமை என்று கூறிக் கொண்டாள். கலவரத்துடன் தன் அடிவயிற்றைக் கைகளால் தாங்கியபடி, உள்ளே சென்று படுக்கை மீது சாய்ந்தவள், "அம்மா! காமாஷி! காமாஷி! எனக்கு மனபலத்தைக் கொடு" என்று இறைஞ்சினாள்.

வெளியே போன குருமூர்த்தி வீடு திரும்பவே இல்லை. அலுவலகத்து ஆள் ஒருத்தனை அனுப்பி அவனது உடைகளை பெட்டியில் அடுக்கித் தருமாறு, மொட்டைக் கடிதம் ஒன்று எழுதி அனுப்பினான்.

சில தினங்களில் பம்பாய் அலுவலகத்துக்கு மாற்றல் கேட்டு வாங்கிப் போய் விட்டதாக செய்தி கிடைத்தது.

தோழி சர்மிளா பார்கவிக்கு சுருக்கமாக ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.



"உன் கணவருக்கு பம்பாய்க்கு மாற்றலாகிவிட்டது என்று கேள்விப்பட்டேன். அவர் இப்போது அனிதாவின் ஃப்ளாட்டிலேயே அவளுடன் தங்கியிருக்கிறாராம். எதற்கும் நீ ஜாக்கிரதையாக இரு. எனக்கு ரொம்ப மனக்குழப்பமா இருக்கு.

ஆனால் பார்கவிக்கு குழப்பம் ஏதும் இருக்கவில்லை. குருவின் முடிவு என்ன என்று விளங்கிவிட்டது. துயரத்தில் மனம் துவண்டது. வேதனை குடலைச் சுருட்ட முனைந்தது. அந்த பயங்கர உணர்வுகளை வெல்ல, சாம்பு சொன்ன வழி தான் சிறந்தது என்று, அவளுக்குப்பட்டது.

ஒரு வெள்ளிக்கிழமை கையில் இரண்டு எலுமிச்சம் பழங்களுடன் மாங்காட்டு நாயகியாம் காமாஷியைக் கண்டு தரிசித்து...மனமுருக பிரார்த்தித்துக்கொள்ள புறப்பட்டுச் சென்றாள். விடியற்காலையிலேயே எத்தனை பெரிய கூட்டம்! ஊசிமுனைமேல் தவமிருந்த உக்கிரமான உத்தமியாம் தாயைக் காண வந்திருப்பவர்களுடன் வரிசையில் பொறுமையாக நின்றாள். மனம் நிறைய அவள் அருளை வேண்டினாள்.

காமாஷித்தாயே! உலகுக்கெல்லாம் அன்னையாக நீ இருக்கியே. என்னை ஒரே ஒரு ஆரோக்யமான குழந்தைக்கு தாயாக இருக்க அருள் பாவித்து விடு அம்மா...மனம் கதறியது. கண்களில் நீர் மல்க நெஞ்சுருக—கால்கடுக்க—பக்திப் பெருக்கோடு—நம்பிக்கையே உருவாக—வரிசையில் அவள் மெள்ள நகர்ந்தாள்.

அர்ச்சகர் அவள் தந்த எலுமிச்சம் பழங்களை அம்பாள் சந்நிதியில், ஆச்சார்யாள் பிரதிஷ்டை செய்த ஸ்ரீசக்ரத்தில் வைத்து பிரார்த்தித்துவிட்டு...ஒன்றை எடுத்து அவளிடம் திருப்பிக் கொடுத்தார்.

சாம்புவின் ஆலோசனைப்படியே, வீடு திரும்பியதும் பூஜையறையில் பராசக்தியின் படத்தின் முன் அந்தப் பழத்தை வைத்துவிட்டு—அர்ச்சனைக் குங்குமத்தை இட்டுக்

கொண்டு, குத்து விளக்கை ஏத்தி வைத்து—விழுந்து வணங்கினாள்.

அடுத்த வாரம் படத்தருகே இருந்த பழத்துடன் ஒரு புது எலுமிச்சம் பழத்தை கூட எடுத்துக்கொண்டு புறப்பட்டாள். அர்ச்சகர் அம்பாள் ஸ்ரீ சக்ரத்தின் முன் இரண்டையும் வைத்து பிரார்த்தித்து விட்டு புதியதான எலுமிச்சம் பழத்தை அவளிடம் கொடுத்தார்.

வீட்டுக்குத் திரும்பியதும் .. மறுபடியும் முந்தைய வாரத்தைப் போல பழத்தை படத்தின் முன் வைத்துக் கும்பிட்டாள்.

ஆறு வாரங்கள் தொடர்ந்து இவ்விதமாக...மாங்காட்டுத் தாயை விடியற்காலையிலே சென்று தரிசித்துக் கொண்டிருந்தாள்... கடைசியாக முடிந்த ஆறாவது வாரத்தின்போது சாம்பு சொறபடி வெள்ளி கூஜா நிறைய தேன், கல்கண்டு, ஏலக்காய், குங்குமப்பூ போட்ட பாலை எடுத்துச் சென்று அம்பாளுக்கு நைவேத்யம் செய்துவிட்டு கூடியிருந்த பக்தர்களுக்கு விநியோகம் செய்து—மீதத்தை வீட்டிலுள்ளோருக்குத் தந்து, கடைசியாகத் தானும் சாப்பிட்டாள். அர்ச்சகர் தந்த எலுமிச்சம் பழத்தை பராசக்தி படத்தின் முன் வைத்து ஒரு மண்டலம்... விளக்கேற்றி வணங்கி விட்டு முடிவில் தான் விரும்பியதை வேண்டிக் கொண்டபடி வீட்டுக் கிணற்றுக்குள் விட்டெறிந்தாள்...

அப்பா! மனம் எப்படி லேசாகிப் போனது. நம்பிக்கை என்பதற்குத் தான் எத்தனை சக்தி உள்ளது.

டாக்டர் ரேவதியிடம் தான் செய்து வரும் பிரார்த்தனையைப் பற்றிக் கூறியபோது அவள் சிரித்தபடியே சொன்னாள்.

"Hope of Tomarrow and belief in God Keeps you going from day to day.'' ஆழமான நம்பிக்கையைப் பற்றிக் கொண்டு அன்னை பராசக்தியின் பாதமே துணையாக பயமின்றி நாட்களை வேகமாக இன்பமான எதிர்பார்ப்புடன் கழித்துக் கொண்டிருந்தாள்.



பம்பாயிலேயே தங்கிவிட்டிருந்த குருவிடமிருந்து கடிதம் கூட காணவில்லை. அவனது அசட்டை மனதை உறுத்தியது. ஆனால் அதை உதறிவிட்டு இரவும் பகலும் தனது குழந்தையைப் பற்றியே எண்ணுவதில் நேரத்தை செலவிட்டாள்.

முடிவில் அந்த நாளும் வந்தது. ரேவதி நர்ஸிங் ஹோமில் முன்கூட்டியே அனுமதிக்கப்பட்டு திட்டமிட்டபடியே ஸிஸேரியன் செய்து குழந்தை எடுக்கப்பட்டது.

நினைவு திரும்பியபோது அம்மாவும் மன்னியும் அண்ணாவும் படுக்கை அருகில் நின்று கொண்டிருந்தார்கள்.

''பெண் பிறந்திருக்காள். பேர் என்ன வைக்கிறதுன்னு இங்கே ஒரே வாக்குவாதம்.''

அண்ணா அன்போடு கூறிவிட்டுச் சிரித்தார்.

அம்மா குழந்தையை எடுத்து வந்து காட்டினாள்.

கொழு கொழுவென்று...குழந்தை ஆரோக்யமே உருவாக...எத்தனை அழகாக இருந்தாள்!

''பெயர் வைக்க இப்ப சத்தியா அவசரம் வேண்டாம் அம்மா! அவ நம்ப வீட்டு பாப்பாவா இருந்தாலே போதும்...'' ஆனந்தக் கண்ணீர்... இமைகளைச்சுட... நெஞ்சு பெருமையால் பூரித்துச் சொன்னாள் பார்கவி.

சாதாரண குழந்தையைப் போல கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு உரத்த குரலில் அழுது குழந்தை உடம்பை நெளித்து அசைப்பதைக் கண்டு அவளுக்குத் தாங்கொணா மகிழ்ச்சி.

ஆனாலும் உள்ளுக்குள்ளே ஒரு சிறு நடுக்கம்...நீருபூத்த நெருப்பாக நெஞ்சிலே திகிலாகப் புரண்டு கொண்டிருந்தது.

தாயே! நீ கைவிடலை... ஆனாலும், பயம் என்னை விட்டுப் போகலையம்மா... எனக்கு சதா துணையாக இரும்மா... தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

அதற்குப் பின்னர் பார்கவிக்கு மூச்சு விடக்கூட நேரம் இருக்கவில்லை.

தூங்கும் நேரம் தவிர... நாளின் மீதிப் பொழுதெல்லாம் குழந்தையருகிலேயே கழித்தாள்.

குழந்தை பசிக்கு அழுகிறாளா... பாலை ஆவலுடன் சாப்பிடுகிறாளா... தூங்குகிறாளா... கைகால்களை அசைத்து விளையாடுகிறாளா... சப்தங்களை எழுப்பி தலையைத் திருப்பி... பார்வையைச் சுழல விடுகிறாளா?

ஒவ்வொரு நிமிஷமும்... குழந்தையின் வளர்ச்சியையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி டாக்டர் ரேவதியிடம் ஆலோசனை கேட்டு... தைரியமும் எதிர்பார்ப்பு மாக நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

அவளது பாப்பா... மூன்றாவது மாதத் தொடக்கத்திலே எல்லா குழந்தைகளையும் போல அவளைப் பார்த்து சிரித்தாள்... பின்னர்... உடலைக் கவிழ்த்துக் கொண்டாள்... நீஞ்சி... தவழ்ந்து... எழுந்து உட்காரத் தொடங்கியவள் எட்டாவது மாதத்திலே தவழ் ஆரம்பித்தாள். தன் எலிப் பற்களைக் காட்டி—கண்களை இடுக்கிக் கொண்டு, தன்னைப் பார்த்து சிரித்தபோது... உலகமே தன்னுடையதாகிவிட்ட பேரார்வத்தில் பார்கவி... பூரித்துப் போய்விட்டாள்.

ஒரு வருஷம் முடிவதற்குள் பாப்பா... மெல்ல நாற்காலி கையைப் பிடித்துக்கொண்டு எழுந்து நிற்பதைக் கண்ட தாய்... ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தாள்.

“சாம்பு! அம்மா! எல்லோரும் வந்து பாருங்கோ ... பாப்பா... நிக்கறா... நிசமா நிற்கறா...” தாளமாட்டாத மகிழ்ச்சியால் வீட்டிலுள்ள அனைவரையும் கூப்பிட்டு காட்டி கைதட்டி.... அப்பப்பா... அவள் அடைந்த ஆனந்தம்...!

பாப்பாவின் பிறந்தநாள் அன்று ஊனமுற்றோர் இல்லத்து குழந்தைகளுக்கு உதவ கணிசமானதொரு தொகையை நன்கொடையாக உதவினாள். மாங்காட்டு



காமாக்ஷிக்கு அபிஷேக ஆராதனைக்கு ஏற்பாடுகள் செய்து விட்டிருந்தாள்.... வீட்டிலே உறவினர்களுடன் விருந்து. ஆனால், மனதிற்குள் வருத்தம் இருக்கத்தானிருந்தது. குழந்தை பிறந்த செய்தியையும் அவள் ஆரோக்யமாக வளரும் செய்தியையும் அவ்வப்போது அண்ணாவும் அவளும் குருமூர்த்தியின் பம்பாய் அலுவலகத்து முகவரிக்கு எழுதிப் போட்டுக் கொண்டுதான் வந்தார்கள். அவனிடமிருந்து.... நீண்ட மௌனம்தான் பதிலாகக் கிடைத்தது.

குழந்தையின் பிறந்தநாளைக் கொண்டாட அண்ணா, மன்னி இருவரும் பங்களூரிலிருந்து வந்திருந்தனர்...விருந்துக்குப் பின்னர் வீட்டவர்கள் ஒன்று கூடித் திரும்பத் திரும்ப அதையேதான் பேசினார்கள். அதாவது,

குருமூர்த்தி பங்களூருக்கு அவள் அண்ணா ஹரியைப் பார்க்கப் போயிருக்கிறான். தனியாகவல்ல, தான் மணக்க விரும்பும் அனிதாவைக் கூட அழைத்துக்கொண்டு, அண்ணாவின் ஆபீசில் போய் நின்றிருக்கிறான். தனக்கு விரைவாக அவரது தங்கையிடமிருந்து விவாகரத்து வாங்கித்தர உதவ வேண்டும் என்று வேறு துணிச்சலாகக் கேட்டிருக்கிறான். ஹரி அவனை கைநீட்டி அடிக்காத குறை. இருவருக்கிடையே நடந்த வாய்ச் சண்டை... விவரிக்க இயலாத அளவு மோசமாகப் போய்விட்டிருந்ததாம்.

அதைப் பற்றி அண்ணா—மன்னி—அம்மா— எல்லோரும் ஆத்திரமாக, கோபமாக, கேலியாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

பார்கவி அதில் கலந்து கொள்ளவேயில்லை. மௌனமாகத் தன் குழந்தையுடன் அவள் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தாள்.

“என்னம்மா ... ஒண்ணுமே சொல்லமாட்டேங்கறே? அவர் நோட்டீஸ் விடப்போறார்...நாமும் பதிலுக்கு

நோட்டீஸ் விடணும்...இல்லே வெட்கத்தை உதறிட்டு அவர் காலில் விழுந்து, சமாதானம் பேசி...உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைக்கணும்...'' அண்ணா ஆரம்பித்தார்.

பார்கவியின் கண்கள் குழந்தையின் மேல் பதிந்திருந்தன. அவள் தன் சகோதரன் பக்கம் திரும்பவில்லை...குழந்தையையே மிகவும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதுசமயம் குழந்தை சுவரைப் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தாள்,

காமாக்ஷி...என் குழந்தைக்கு கால்களில் நல்ல பலத்தைக் கொடும்மா....ஒரு வருஷம் ஆகப்போறதே .... குழந்தை நடக்கணுமே... தாயே...குழந்தைக்கு கால்களில் நல்ல பலத்தைக் கொடும்மா...மனம் தவித்தது.

சுவரைப் பிடித்து எழுந்து நின்ற குழந்தை தலையைத் திருப்பி தன் தாயைப் பார்த்தாள்.

எலிப் பற்களைக் காட்டி கன்னங்குழிய சிரித்தபடி தன் சின்னச் சின்னப் பாதங்களை பூமியில் வைத்து—மாமா வாங்கிப் போட்ட தண்டை ஒலிக்க...பட்டுப்பாவாடை பளபளக்க...தத்தித்தத்தி தாளமிட்டபடி ஆடியவளாக ஒரே எட்டில் கைகளை நீட்டிக்கொண்டு...ம்மா!...என்று கூவியபடி தாயின் மடியில் வந்து விழுந்தாள்.

மெய்சிலிர்த்துப் போனாள் பார்கவி...ஆனந்தத்தில் அவள் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது... மகிழ்ச்சி கண்ணீராக இமைகளில் கரைபுரண்டது.

“அம்மா....அண்ணா! மன்னி பார்த்தேளா அதிசயத்தை! ...என் பாப்பா நடக்கிறா...இனி எனக்குப் பயமில்லை...இவ யாருன்னு எனக்கு தெரிஞ்சு போச்சு...சாம்பு மாமா இங்கே வாங்கோ....நம்ப வீட்டுக்கு வந்திருக்கிறவ யாருன்னு உங்களுக்கு நன்னாவே தெரியும்...'' ஆவேசமாகக் கூறினாள்.



யாவரும் வியப்புடன் அவளையே பார்த்தனர். “ஆமாண்ணா! மாங்காட்டு தேவி எனக்குத் துணையா வந்திருக்கா...இவ பேரு அபர்ணா?....ஆமாம் அபர்ணா! இனி எனக்கு துளிக்கூட பயமே கிடையாது. அவர் நோட்டீஸ் விட்டால்—பதில் நோட்டீஸ் விடுங்கோ, என் குழந்தையை வேண்டாம்னு சொன்னவர்...என்னை உதறிவிட்டுப் போன புருஷன் எனக்கும் வேண்டாம்....ஊசிமுனையிலே உக்கிரமான தவம் செய்துட்டு வந்திருக்கா என் தாய்....அவ என் பக்கத்திலே இருக்கச்சே எனக்கு பயமே இல்லேண்ணா!'' ஆவேசமாக கத்தி கூச்சலிட்ட பார்கவி....மயங்கி விழுந்தாள்.

குழந்தை அபர்ணா தாயின் கன்னத்திலே முகத்தைப் பதித்துக் கொண்டு...ம்மா!.......ங்கா!...என்று கொஞ்சினாள்.

★